Registered as a news paper.



விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

Thirumurugan Com Net
திருமுருகன் கொம் நெற்
WESTERN UNION Money Transfer
FedEx Express
Inland & I.D.D Calls, Internet-Browsing & E-mail, Fax, Photo Copy, Computer typing & Printing, Designing-Cards, Laminating, CD-Writing, Binding, Parcel Services, Bus-Van-Flight Ticketing Services, & Computer-Hand phone Accessories,
259,K.K.S.Road Jaffna. Tel - 021 222 3958 Fax - 021 222 7836
E.mail thirumuruglan@lycosmail.com
46,Adiyapatham Road, thirunelvely, Jaffna. Tel - 021 222 7560 Fax - 021 222 7340

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி – 27 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 29 (11.01.2005) செவ்வாய்க்கிழமை இதழ்: 103

# சமாதான வழியில் இனப்பிரச்சினையை தீர்க்கக்கூடிய வாய்ப்பை தகர்த்துவிட்டார் சந்திரிகா!

## மாவை சேனாதிராசா எம்.பி. கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**சமாதான வழிமுறைகளின் மூலம் - பேச்சுக்கள் மூலமாக, மனிதாபிமானப் பணிகளினூடாக இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்ற நம்பிக்கையை ஜனாதிபதி சந்திரிகா தகர்த்துவிட்டுள்ள அதேவேளை - சுனாமியினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சர்வதேச உதவிகள் கிடைப்பதை தடுத்து வருவதாகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கண்டனம் தெரிவித்துள்ளார்.**

அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

சுனாமி கடற் பேரழிவு நிகழ்ந்த நாள் முதல் இன்றுவரைக்கும் தமிழ் பிரதேசங்களில் பாதிக்கப்பட்ட மக்களை முகாம்களுள்ளும் தனியார் இடங்களிலும் பாதுகாத்து உணவு, உடை, மருத்துவ உதவிகள் மற்றும் சுகாதாரப் பணிகள் உட்படப் பராமரிப்புப் பணிகளைப் பொதுமக்கள் அரசு சாராத நிறுவனங்கள், குறிப்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே நிறைவேற்றி வந்தனர்.

இந்தப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு அமைக்கப்பட்ட முகாம்களை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாண நிலைமையை ஆளுநர் ரிரோன் மதிப்பீடு!

(யாழ்ப்பாணம்)

வட - கிழக்கு மாகாண ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ நேற்று யாழ்.குடாநாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

நேற்றுக் காலை விமானம் மூலம் பலாலி விமானத்தளத்தில் வந்திறங்கிய ஆளுநர் தெல்லிப்பளை வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டு அதை மீளத் திறப்பது தொடர்பாக ஆராய்ந்தார்.

பின்னர் யாழ்.செயலகத்துக்கு காலை 11.30 மணியளவில் வருகை தந்த ஆளுநரை- அரச அதிபர், மேலதிக அரச அதிபர் ஆகி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈரோஸ் சங்கர் ராஜி மாரடைப்பால் மரணம்!

(கொழும்பு)

ஈரோஸ் அமைப்பின் தலைவரான சங்கர் ராஜி நேற்று அதிகாலை மாரடைப்பால் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் நெருங்கிய சகாவான சங்கர் ராஜியின் இயற்பெயர் திருநேசன் (வயது 54) ஆகும்.

பாலகுமாரன் தலைமையிலான ஈரோஸ அமைப்பில் சங்கர் ராஜியும் முக்கியஸ்தராக இருந்தார். 1990 இல் பாலகுமாரன் உள்ளிட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஷ் போர்க் கப்பல் திருமலை வந்தடைந்தது!


(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கென உணவு மற்றும் மருந்துப் பொருட்களுடன் பிரிட்டிஷ் கடற்படைக் கப்பல் ஒன்று நேற்று திருகோணமலையை வந்தடைந்தது.

நேற்றுக்காலை 11 மணிளளவில் திருகோணமலை துறைமுகத்தில் அமைந்துள்ள அஷ்ரப் இறங்கு துறையை வந்தடைந்த இந்தக் கப்பலிலிருந்து உடனடியாகவே பொருட்கள் இறக்கும்பணி ஆரம் பிக்கப்பட்டது.

இந்தக் கப்பலில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக உண

(12 ஆம் பக்கம் பார்க்க)



காலிக்கு வந்திருக்கும் அமெரிக்கப் போர்க் கப்பல் யு.எஸ்.எவ். துலுத்.



கடற்கரையில் தரையிறக்கும் அமெரிக்கத் துருப்புக்கள்.

## 100 படையினர், 3 ஹெலிகளுடன் அமெரிக்கக் கப்பல் காலி வந்தது!

(கொழும்பு)

நூறு அமெரிக்க கடற் படையினருடனும் மூன்று ஹெலிக்கொப்டருடனும் அமெரிக்க கடற்படைக் கப்பலொன்று தென் பகுதியிலுள்ள ஹொக்கலவை வந்தடைந்தது.

யு.எஸ்.எஸ். துலுத் என்ற நீரிலும் நிலத்திலும் பயணம் செய்யக்கூடிய ஹெவர் கிரப்ட் ரகத்தைச் சேர்ந்த அமெரிக்க கப்பல் முன்னர் ஈராக்கிற்குச் செல்லவிருந்ததாக தெரிய வருகிறது.

இந்தக் கப்பல் காலி கடற்பரப்பில் ஒரு வார காலம் நங்கூரமிடப்பட்டிருக்கும் என்றும், ஈராக் செல்வதா என்பது குறித்து தீர்மானம் எடுக்கும்வரை அங்கேயே தரித்து நிற்குமெனவும் அமெரிக்கத்தூதரக அதிகாரி கிறிஸ்லோப் தெரிவித்தார்.

ஒஸ்ரின் வகையைச் சேர்ந்த இந்தக் கப்பலில் 3 ஹெலி ஹொப்டர்களும், தரையில் பயணம் செய்யும் வாகனங்களையும் மாற்றும் புனரமைப்புபணிக்கான பொறியியல் உபகரணங்களும் எடுத்துவரப்பட்டுள்ளன.

யு.எஸ்.எஸ். பொன்ஹொம் றிச்சர்ட் என்ற விமானம் தாங்கி கப்பல் காலிக்கு வரவிருந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்கள், எம். பிக்கள் வெளிநாடு செல்லத் தடை!

(கொழும்பு)

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா தடைவிதித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கு செல்வதாக இருந்தால் தனது விசேட அனுமதியை பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் ஜனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்பும் நோக்கில் அரசாங்கம் திட்டமிட்டுள்ள வேலைத்திட்டங்களில் இவர்களைப் பங்குபற்ற வைப்பதற்காகவே ஜனாதிபதி இந்த அறிவித்தலை வழங்கியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அழிவுக்குள்ளான பகுதிகளின் பிரதேசசபை மட்டத்தில் அரசின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களைப் போல எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்து உருவாக்கும் குழுக்கள் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளை பார்வையிடும் திட்டமொன்றை உருவாக்குவது அரசின் திட்டமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## கொபி அனானை தடுக்கவில்லையாம்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரின் இலங்கை விஜயத்தின்போது இலங்கை அரசாங்கம் திட்டமிட்ட முறையில் வடக்கு-கிழக்கு பகுதிகளை புறக்கணித்திருப்பதாக வெளியான குற்றச்சாட்டுக்களை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் - ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளரை யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் அழைத்துச்செல்ல அர

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொபி அனான் வடக்கே செல்லாதது ஐ.நா. பிரகடனத்துக்கு முரணானது!

### நிமல்க பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் செயலர் கொபி அனான் இலங்கைக்கான தமது விஜயத்தின்போது பாரிய அனர்த்தங்கள் இடம்பெற்ற வடக்கு - கிழக்கு மாகாணத்தை பார்வையிடச் செல்லாதது ஐ.நா பிரகடனத்துக்கு முற்றும் முரணானது என்று சகலவிதமான பாகுபாடு மற்றும் இனப்பாகு பாட்டிற்கு எதிரான சர்வதேச இயக்கத்தின் தலைவர் நிமல்க பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பு தனியார் வானொலிக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இலங்கை அரசின் ஆலோசனைகளின் படி பெரும்பாதிப்படைந்த வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்கு கொபி அனான் செல்லாதது தவறான விடையம்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR Your friend in the skies...

# குடாநாட்டு வர்த்தக நிலையங்களில் நிறுவை அளவைகளில் முறைகேடு

## மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்.குடாநாட்டில் வர்த்தக நிலையங்களில் பொருட்கள் அளவீடுகளின் போது உரிய நிறுவை அளவைகளைப் பயன்படுத்துவதில்லை என்றும், அங்கீகரிக்கப்படாத அளவைகள் பயன் படுத்தப்பட்டு வருவதாகவும், அதனை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைபபாடு செய்யப்பட்டது.

இந்தப் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது -

யாழ். குடாநாட்டில் உள்ள வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் நிறத்தல் அளவைகளில் பொருட்களை அளவீடுசெய்யும்போது, படிகளுக்கு பதிலாக சவர்க்காரம், கல், சைக்கிள் அச்சு, கடதாசிப் பொட்டலங்கள் போன்றவற்றை பயன்படுத்துகிறார்கள்.

இதுபோல திரவங்களை அளப்பதற்கு சோடாப் போத்தல்கள், மதுபான போத்தல்கள் போன்றவற்றை பயன்படுத்தி அளக்கின்றனர். இந்த நடவடிக்கைகளால் மக்கள் எவ்வித விளக்கமும் அற்ற நிலையில் பொருட்களை கொள்வனவு செய்கின்றனர். இதனால் நிறுவனங்களில் முறைகேடுகள் இடம்பெற வாய்ப்பாக இருக்கின்றது. உண்மையான நிறுத்தல் உபகரணங்கள் மற்றும் திரவங்களை அளப்பதற்கு அதற்குரிய கொள்கலன்கள் பயன்படுத்தப்படவேண்டும். நிறுத்தல் அளவைகள் சம்பந்தமான சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு வேலைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.


முன்னைய காலங்களில் இவ்வாறான முறையற்ற அளவைகள மற்றும் சட்டதிட்டங்களுக்கு அமைய அளவைகள் பயன்படுத்தப்படுமிடத்து அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு தண்டப்பணமும் அறவிடப்பட்டன. ஆனால், இன்று அந்த நடைமுறை பின்பற்றப்படுவதில்லை.

மேலும் நிறுவை அளவைகள் தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பான அதிகாரியொருவர் யாழ்.கச்சேரியில் இருக்கின்றார். ஆளணிப் பற்றாக்குறை காரணமாக நடவடிக்கை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக அவர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. எனவே இவற்றைக் நிவர்த்தி செய்ய மனித உரிமைகள் ஆணைகககுழு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த முறைப்பாடு 15 பேர் அடங்கிய குழுவினரால் யாழ். வணிகர் கழகம் ஊடாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

### வணிக பீட மாணவர்களுக்கு

யாழ்ப்பாண பல்கலைக்கழக 2 ஆம் வருட இரண்டாம் அரையாண்டு முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடப் பரீட்சைகள் திட்டமிட்டபடி எதிர்வரும் 17 ஆம் திகதி தொடக்கம் நடைபெறும் என முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.



மறைந்த மூதறிஞர் கலாநிதி க.சொக்கலிங்கம் (சொக்கன்) எழுதியிருந்த சிறுகதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த வெளியீட்டு விழாவில் சிறப்பு பிரதியினை பேராசிரியர் சண்முகதாஸ் வழங்க சொ.சிவநாதன் ஐயா பெற்றுக் கொள்வதனைக் காணலாம்.

## ஊக்குவிப்பாளர்களுக்கு முதலுதவிப் பயிற்சி

'மனித உரிமைகள் ஊக்குவிப்பாளர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடல் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் ஏறபாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் மனித உரிமைகள் ஊக்குவிப்பாளர்களுக்கு முதலுதவி வழங்குவது தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இந்தப் பயிற்சியில் அனைத்து மனித உரிமைகள் ஊக்குவிப்பாளர்களையும் தவறாது, பங்குபற்றுமாறு மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் இடம் பெயர்ந்தோருக்கான விசேட செயற்திட்டத்தின் செயற்திட்ட உத்தியோகத்தர் வ.வேழினி தெரிவித்தார்.

## மத்திய கல்லூரி மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் தரம் 10,11 வகுப்புக்களில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் நடைபெற்று முடிந்த க.பொ.த். சாதாரண தரப பரீட்சை வினாத்தாள் திருத்தும பணிக்கு சென்றுள்ளதனால், இந்த மாணவர்களுக்கான வகுப்புகள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஆரம்பமாகும். அதேவேளை ஏனைய பிரிவு மாணவர்களுக்கான வகுப்புகள் வழமைபோல நேற்றைய தினம் ஆரம்பமாகியுள்ளன.

எனவே தரம் 10,11 மாணவர்கள் தவிர மற்றைய மாணவர்கள அனைவரையும் பாடசாலைக்கு வழமைபோல் சமுகமளிக்குமாறு அதிபர் கேட்டுள்ளார்.


### சிறு விளம்பரம்

ஒத்துமாறல்

மன்னார் கல்வி வலயத்தில் நியமனம் பெற்றுள்ள கலைப்பட்டதாரி ஒருவர், வவுனியா வடக்கு/கிளிநொச்சி/முல்லைத்தீவு/யாழ்ப்பாணம் பகுதியில் நியமனம் பெற்றுள்ளவருடன் ஒத்துமாற விரும்புகிறார். தொடர்பு:- 077 6155296. (1028)

நாதன்ஸ் யாழ்ப்பாணம். (குளிரூட்டப்பட்டது)
குதூகல ஆரம்பம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
இலங்கை மண் தாவடியின் மைந்தன்ஜெய் ஆகாஷ், ஸ்ரீதேவிகா, வாணி நடித்த
ராமகிருஷ்ணா



காட்சி நேரம் - 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிரஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், ரோஜா நடித்த
சின்னத்துரை (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
ANACONDA - 2

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான
அர்ஜுன் (இருவேடம்), சாயாசிங், ல்லலா,



விஜய் சூர்யா
கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)
பொங்கல் வெளியீடாக தனுஷின்
தேவதையைக் கண்டேன்

ராஜா யாழ்ப்பாணம்.
விஜய், சிநேகா, வடிவேலு நடித்த
வசீகரா
பொங்கல் வெளியீடாக
சரத்குமாரின் ஐயா (ரீல்ஸ்)
புதிய நேரம்: 10.30, 2.30, 6.30, மட்டும்.

IDM
The Nation's ICT Academy

IDM(PVT)LTD.
Authorized ICT Education
JAFFNA Centre

GIT Global Info Tech
Be brave and try new things

கீழ்வரும் கற்கைநெறிகள் எமது நிறுவனத்தினால் பின்வரும் திகதிகளில் ஆரம்பமாக உள்ளன.

| Courses | Batch I | Batch II | Batch III | Courses | Batch I | Batch II | Batch III |
|---|---|---|---|---|---|---|---|
| B.Sc Degree Programme London Metropolitan - University - UK (NCC) | 15th Jan 9.30 am Week end | 17th Jan 9.30 am Week day | - | Microsoft Certified Professional [MCP] 18 hrs | 13th Jan 4.00 pm Week day | 15th Jan 5.30 pm Week end | 19th Jan 5.30 pm Week day |
| Diploma in Computer Studies [DICS] BTEC-Edexcel Regonized 5 Month | 15th Jan 10.00 am Week end | 17th Jan 10.00 am Week day | 25th Jan 10.00 am Week day | Certificate in Web Design & Development 3 Months | 16th Jan 11.00 am Week end | 13th Jan 5.30 pm Week day | - |
| Beginners Diploma in ICT [BDIP-ICT] Only for O/L Students 3 Month | 15th Jan 10.30 am Week end | 17th Jan 10.30 am Week day | 25th Jan 10.30 am Week day | Diploma in Graphic Design 9 Months | 16th Jan 2.00 pm Week end | 27th Jan 10.00 am Week day | - |
| Diploma in Hardware Engineering 6 Month | 15th Jan 3.00 am Week end | 17th Jan 3.00 am Week day | 25th Jau 3.00 am Week day | Industrial Training in Computer Networking 6 Months | 13th Jan 5.30 pm Week day | 27th Jan 2.00 pm Week day | - |
| Diplona in Multimedia Certificat 4 Month | 15th Jan 3.30 am Week end | 17th Jan 3.30 am Week day | 25th Jan 3.30 am Week day | Internet, E-mail & Web Development 3 Months | 13th Jan 5.30 pm Week day | 25th Jan 4.00 pm Week day | - |
| Diploma in Computerized Accounting [DICAP] 6 Month | 15th Jan 4.00 am Week end | 17th Jan 4.00 am Week day | 25th Jan 4.00 am Week day | Microsoft Office XP 2003 | 13th Jan 5.30 pm Week day | 15th Jan 5.30 pm Week end | - |

451 K.K.S Road, Jaffna.

Tel: 021 4591398

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன பதிவுகள் 13/01/2005 இற்கு முன்

# படை உதவி செய்த நாடுகளுக்கு ஜே.வி.பியினர் நன்றி தெரிவிப்பு

இலங்கையில் ஏற்பட்ட இயறகை அனர்த்தம் காரணமாக, ஏற்பட்ட பாதிப்புகளுக்கு உடனடியாகக் கப்பல்களையும், விமானங்களையும், ஹெலிகளையும் மட்டு மன்றித் தமது நாட்டின் படையை வழங்கிய நாடுகளுக்கு ஜே.வி.பி நன்றிகளைத் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்த ஐக்கிய நாடுகளின் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனானின் வருகைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் இலங்கைக்கு உதவிபுரிந்த அனைத்து நாடுகளுக்கும் நன்றி தெரிவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது உலகப் போரின் பின்னர் - ஜேர்மனியும், ஜப்பானும் எழுச்சிபெற ஐக்கிய நாடுகள் சபையும், மேற்குலக நாடுகள் வழங்கிய ஒத்துழைப்பை இலங்கைக்கு வழங்க வேண்டும்.

சர்வதேச நிதி உதவிகள் விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக வழங்கப்படக் கூடாது. இதற்குரிய சகல ஏற்பாடுகளையும் ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கப்படவில்லை எனத் தமிழ்க் கூட்டமைப்புத் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை. சர்வதேச தேர்தல் விதிகளுக்கு முரணான வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்க் கூட்டமைப்பின் கருத்துக்கள் குறித்து, உலக நாடுகள் கவனம் செலுத்தத் தேவையில்லை என்றும் அவர் தனது கடிதத்தில் குறிபபிட்டுள்ளார்.

# அமெரிக்கப் படை வீரனின் கைப்பையைக் கையாடிய இலங்கை கடற்படைச் சிப்பாய்

(திருகோணமலை)

அமெரிக்கப் படையைச் சேர்ந்த ஒருவரின் கைப்பையை இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் திருடியதால், திருகோணமலையில் பரபரப்பு ஏற்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

திருகோணமலை நிலைமையை அவதானிப்பதற்காக அமெரிக்கப் படையினர், இலங்கைக் கடற்படையினரின் வாகனமொன்றில் சென்றனர்,

திருகோணமலைக் கடற்படைத்தளத்தில் தங்கிநின்றபோது, அமெரிக்கப் படைச்சிப்பாய் ஒருவரின் கைப்பை காணாமற்போய்விட்டது. இவரது இந்த விவகாரம் தொடர்பாகத் திருகோணமலை கடற்படை முகாம் பொறுப்பதிகாரியிடம் அமெரிக்கப் படையினர் முறையிட்டனர்.

இதையடுத்து திருகோணமலை கடற்படைத் தளத்தில் - இருந்த கடற்படையினரின் உடைமைகள் சல்லடை போட்டுத் தேடப்பட்டன.

இதன்போது இந்தக் கைப்பையைத் திருடிய இலங்கைக் கடற்படைச் சிப்பாயிடம் இருந்து, இது மீட்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# குழுக்களின் நியமனம் ஜே.வி.பி அதிருப்தி

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டை, மீண்டும் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதியால் அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் பற்றி அதிருப்தியைத் தெரிவித்துள்ள ஜே.வி.பி - புதிய ஆலோசனைகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

இன்று இடம்பெறவுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நடவடிக்கைக் கூட்டத்தின்போது, இந்த ஆலோசனைகள் சமர்ப்பிக்கவுள்ளன.

சுனாமி அனர்த்தத்தின் பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நடவடிக்கைக்குழுக் கூட்டம் - முதற்தடவையாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (தே)

# அநாதரவான நிலையில் 250 சிறுவர்கள்

சுனாமி கடற்கொந்தளிப்பால் பெற்றோரை இழந்து அநாதைகளாக்கப்பட்ட 250 சிறுவர்களது விபரம் கிடைக்கப்பெற்றுள்ளதாகச் சிறுவர் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுவரை நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்கள் எனத் தெரிவித்துள்ள சிறுவர் நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் அபேகுணவர்த்தன - நாட்டிலுள்ள பெற்றோர்களை இழந்த சிறுவர்களது விபரங்கள் திரட்டப்பட்ட பின்னர், அவை பற்றிய விபரங்கள் ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (தே)

# நிவாரணப்பணிக்கென வெளிநாடுகளிடமிருந்து நிதியுதவிகளைக் கோருவதற்கான திட்டவரைபு!

## நிதியமைச்சு முன்வைக்கவுள்ளதாக அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளுக்காக வெளிநாடுகளிடமிருந்து 1500 மில்லியன் டொலர்களுக்கான நிதியுதவியைக்கோரி, திட்டவரைபொன்றை முன்வைக்க விருப்பதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் அனைத்துக்கட்சித் தலைவர்களுடனான ஐ.நா.செயலர் கொபி அனானின் கூட்டத்திலேயே நிதியமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

வெளிநாடுகளிடம் கோரப்படும் இந்த உதவிகள் கிடைக்கப் பெறுமிடத்து, மீள் கட்டுமானப் பணிகளை முன்கொண்டு செல்லலாம். ஐ.நா.சபையின் கீழ், இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவிகள் அனைத்தும், உரிய முறையில் பயன்படுத்துவதற்காக ஐ.நாவின் கண்காணிப்புக்குழு ஒன்றும் நியமிக்கப்படும்.

இங்கு கருத்துத் தெரிவித்த கொபி அனான் -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு நான் செல்லாத போதிலும், எனது பிரதிநிதி ஒருவர் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்குச் சென்று, பாதிப்புக்களைப் பார்வையிட நான் உத்தரவிட்டுள்ளேன். எனவே தென்னிலங்கையைப் போலவே அந்தப் பகுதிக்குமான உதவிப் பொருட்கள் சென்றடையும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை -ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க - ஐ.நா செயலருக்கு கோரிக்கையொன்றை முன்வைத்தார். அதில் வெளிநாட்டு உதவிகள், உரிய முறையில் பகிரப்படுவதற்கு அரசாங்க நிறுவனம் ஒழுங்காக செயற்படவில்லை. அதுபோலவே வடக்கு - கிழக்கில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் உரிய முறையில் செயற்படவில்லை. இது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால், மக்களுக்கான நிவாரணம் அவர்களுக்கு சென்றடைவதில்லை. எனவே ஐ.நா இதில் தலையிட வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், ஐ.தே.கட்சி பிரதித் தலைவர் கருஜெயசூரிய, ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க உட்படப் பலர் கலந்துகொண்டனர். (01)

# 185 மில்லியன் டொலர்களை உலகவங்கி வழங்கவுள்ளது!

நாட்டை மீண்டும் கட்டியொழுப்புவதற்கு உலகவங்கி 185 மில்லியன அமெரிக்க டொலர்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாக உலகவங்கியின் தலைவர் ஜேம்ஸ வூல் பென்சன் தெரிவித்தார்.

இவ்வாறு கிடைக்கும் சர்வதேச நிதி உதவிகள் - செயற் திறன் மிக்கவையாகவும், ஒளிவு மறைவு இன்றி சரியாகப் பங்கிடப்பட வேண்டும் எனவும், அவர் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

விசேடமாக நிவாரண உதவிகளைக் கடன் இல்லாது பெற்றுக் கொள்ள முடியுமானால், அது நாட்டுக்கு நன்மையாக அமையும். இந்த நிதி உதவிகள் செலவிடப்படும் முறை குறித்து விரிவாக நான் கவனம் செலுத்தியுள்ளேன். இந்த உதவிகளை வழங்கும் நாடுகள், அவை தொடர்பான விபரங்களை வெளியிடமுடியும். இதை இணையத்தளங்களில் வெளியிடுவதன் மூலம், மக்கள் இலகுவாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரிட்டிஷ் அபிவிருத்தி அமைச்சர் மட்டக்களப்பு பகுதிக்கு விஜயம்!

பிரிட்டிஷ் அபிவிருத்தித்துறை அமைச்சர் ஹிலரி பென் நேற்று முன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு விஜயம் செய்து, சுனாமி கடற்கொந தளிப்பால் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டார்.

அவருடன் இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகர் ஸ்டீபன் இவானும மட்டக்களப்பு சென்றிருந்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் சிவில் அதிகாரிகளுடன் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நிவாரணப் பணிகள் குறித்து இவர் ஆராய்ந்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம், வடக்கு - கிழக்கில் சுனாமி கடற்கொந்தளிப்பால் ஏற்பட்ட அழிவுகளைக் கருத்திற்கொண்டு, பிரிட்டிஷ் அரசாங்கம் அரசியல் புகலிடம் நிராகரிக்கப்பட்டுள்ள 1500 இலங்கைத் தழிழர்களை நாடு கடத்துவது என்ற தீர்மானத்தை கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்த விடயம் தொடர்பாகத் தான் சம்பந்தப்பட்ட அமைச்சின் கவனத்துக்குக் கொண்டுவருவதாக அவர் பதிலளித்தார். பிரித்தானிய கடற்படையினரும், இராணுவத்தினரும் மீட்புப்பணிகளில் தொடர்ந்து ஈடுபடுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

# செயலணிக்குழுவில் அரச ஆதரவாளர்கள்

(கொழும்பு)

நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக நியமிக்கப்பட்ட செயலணிக்குழுவில் அரச ஆதரவாளர்கள் மட்டும் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டிருப்பதாக சகஜீவன மன்ற நிறைவேற்றுப் பணிப்பாளர் குமார் ரூபசிங்கம் குற்றம் சாட்டியுள்ளார்.

இந்தக் குழுவில் நாட்டிலுள்ள ஏனைய அரசியற் கட்சிகளின் பிரதிநிதிகள், பொது அமைப்புகள், சிவில் சமூகத்தினர் அனைவரும் புறக் கணிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு உதவிகள் அனைத் தையும் அரசாங்கம் கையில் எடுத்துக் கொண்டு தன்னிச்சையாகச் செயற்படுகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (தே)

# விமான நிலையத்தில் பொருட்கள் தேக்கம்

கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதற்காக, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் நிவாரணப் பொருட்களை விமான நிலையக் களஞ்சியத்தில் இருந்து, 48 மணித்தியாலங்களுக்குள் பெற்றுக்கொள்ளாதுவிட்டால் அவைகள் சமூக சேவைகள் அமைச்சிடமோ அல்லது சுகாதார சேவைகள் அமைச்சிடமோ ஒப்படைக்கப்படும் எனத் துறைமுக அபிவிருத்தி விமான சேவை பிரதி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

விமான நிலையக் களஞ்சியத்தில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதாலே இந்தத் தீர்மானத்தை எடுக்க உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ

# சுவிஸிலிருந்து 13 தமிழ் மக்கள் தாயகத்துக்கு திரும்பியுள்ளனர்

(கொழும்பு)

சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில், சுவிஸ் மக்களின் உதவியுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட ஆயிரம் குடும்பத்தை மீள்குடியேற்றுவதற்கு உதவும் முகமாக 26 தொண்டர்கள் நேற்றுமுன்தினம் தாயகம் திரும்பினர்.

இக்குழுவில் 13 சுவிஸ் நாட்டவர்களும், 13 ஈழத் தமிழர்களும் தமது சரீர உதவிகளை செய்வதற்காக நேற்றுமுன்தினம் பிற்பகல் 1 மணியளவில் இலங்கை நோக்கிப் பயணமாகினர். இந்தக் குழுவில் 9 பெண்களும் அடங்கியுள்ளனர்.

இவர்கள் பாதிப்புற்ற மக்களுக்கு உதவி செய்யவேண்டுமென்ற ஆவலில் தமது சொந்தச் செலவிலேயே இங்கு வந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் முகமாக இவர்களைப் போன்ற தொழில்நுட்பவியலாளர்களைத் தொடர்ந்தும் அனுப்புவதற்கு சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் திட்டமிட்டுள்ளது.


சுவிஸ் நாட்டவர்கள் பலரும் இவ்வாறு செல்வதற்கு முன்வந்திருக்கின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.



# 112 ஓட்டங்களால் உலக அணி

# ஆசிய அணியை வென்றது!









சுனாமி நிவாரண நிதிக்காக மெல்போர்னில் நேற்று நடத்தப்பட்ட ஒருநாள் ஆட்டத்தில் 112 ஓட்டங்களால் உலக அணி, ஆசிய அணியைத் தோற்கடித்தது.

மெல்போர்னில் நேற்றுக்காலை ஆரம்பித்த இந்த ஆட்டத்தைக் காண 70 ஆயிரத்து 101 ரசிகர்கள் மைதானத்தில் திரண்டிருந்தனர்.

அதைவிட 122 நாடுகளில் ஒரு பில்லியன் ரசிகர்கள் இந்தப் போட்டியைத் தொலைக் காட்சி மூலம் பார்த்தனர்.

சுனாமியால் உயிரிழந்தோருக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் ஆரம்பித்த போட்டியில் அவுஸ்ரேலியப் பிரதமர் ஹொவார்ட் நாணயச் சுழற்சியைச் செய்தார்.

இதில் உலக அணித் தலைவர் பொண்டிங் வெற்றி பெற்றதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடுவதெனத் தீர்மானித்தார்.

அவுஸ்ரேலிய வீரர் கில்கிறிஸ்ட்டும், மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் கிறிஸ் கெய்லும் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர்.

முதலாவது ஓட்டத்தைப் பெற்றுக் கொடுத்த கெய்ல் - அணியின் ஸ்கோர் ஒன்றாக இருந்த போதே சகீர்கானின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து பொண்டிங் களமிறங்கினார். ஸ்கோர் 50 ஆக உயர்நதபோது - அதிரடியாக ஆடிக்கொண்டிருந்த கில்கிறிஸ்டும் சகீர்கானின் பந்துவீச்சில் ஆட்டமிழக்க நேரிட்டது.

இவர் 20 பந்துகளில் 3 பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 24 ஓட்டங்களைப் பெற்றார்.

மூன்றாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த பொண்டிங்கும் லாராவும் அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவிக்க - ஸ்கோர் உயர்ந்தது.

31 ஆவது ஓவரில் ஸ்கோர் 172 ஆக உயர்ந்தபோது - கும்ளேயின் பந்துவீச்சில் லாரா ஆட்டமிழந்தார். 77 பந்துகளில் 3 பவுண்டரிகளுடன் 52 ஓட்டங்களை இவர் பெற்றுக் கொடுத்தார்.

இதன்பின்னர் கெய்ன்ஸ் களமிறங்கி ஆசிய அணி வீரர்களின் பந்து வீச்சுக்களுக்கு பவுண்டரிகள், சிக்ஸராக விளாசினார்.

இந்தநிலையில் உலக அணித் தலைவர் பொண்டிங் தனது சதத்தைக் கடந்தார்.

எனினும் 39 ஆவது ஆவரில் ஸ்கோர் 263 ஆக இருந்தபோது அபாரமாக ஆடிக் கொண்டிருந்த பொண்டிங் 115 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். 102 பந்துகளில் 8 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் இவர் இந்த ஓட்டங்களைக் குவித்திருந்தபோது கும்ளேயின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக மக்ரா களமிறங்கி எதிர் கொண்ட முதற்பந்தை அடித்து ஆடமுற்பட அதை யுகானா பிடியெடுத்து ஆட்டமிழக்கச் செய்தார்.

பின்னர் பிளெமிங் மைதானத்துக்கு வந்தார். கெயின்ஸுடன் அவர் இணைந்து ஓட்டங்களைக் குவிக்க அணியின் ஸ்கோர் உயர்ந்து 286 ஐத் தொட்டபோது கெயின்ஸ் ஆட்டமிழந்தார். முரளிதரனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்த கெய்ன்ஸ் - 46 பந்துகளில் 6 பவுண்டரிகள், 2 சிக்ஸருடன் 69 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

அடுத்து ஹைடன் ஆடத் தொடங்கிய போதும் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க - விற்றோரி களமிறங்கி அதிரடி ஆட்டம் ஆடினார்.

ஸ்கோர் 337 ஆக அதிகரித்தபோது பிளெமிங் ஆட்டமிழந்தார். 28 பந்துகளில் 30 ஓட்டங்களை இவர் பெற்றிருந்தார்.

இந்தநிலையில் 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட் இழப்புக்கு 344 ஓட்டங்களை உலக அணி குவித்தது.

விற்றோரி 17 பந்துகளில் 27 ஓட்டங்களுடனும், வோன் 2 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

ஆசிய அணி சார்பில் முரளிதரன் 3 விக்கெட்டுக்களையும், சகீர்கான், கும்ளே ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், வாஸ் 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதையடுத்து ஆசிய அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. ஜெய சூரிய - ஷேவாக் ஜோடி அபாரமாக ஆடி ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கியது.

ஸ்கோர் 59 ஆக உயர்ந்தபோது ஜெய சூரிய 29 பந்துகளில் 2 பவுண்டரியுடன் 28 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து கங்கூலி - ஷேவாக்குடன் இணைந்து ஆடிக்கொண்டிருக்க - 39 பந்துகளில் 5 பவுண்டரி, 1 சிக்ஸருடன் 45 ஓட்டங்களைப் பெற்றிருந்த ஷேவாக் ஆட்டமிழந்தார்.

ஸ்கோர் 107 ஆக உயர்ந்தபோது கங்கூலி 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற ராவிட் - யுகானா ஜோடி ஆட்டத்தைத் தொடர்ந்தது. ஆயினும் யுகானா 4 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப சங்கஹார களமிறங்கினார்.

அணியின் ஸ்கோர் 156 ஆக இருந்த நிலையில் சங்கஹார ஆட்டமிழந்தார். இவர் 24 பந்துகளில் 24 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்துவந்த அப்துல் ரசாக் 11 பந்துகளில் 12 ஓட்டங்களுடனும், வாஸ் 7 ஓட்டங்களுடனும், சகீர்கான் ஓட்டமெதையும் பெறாமலும், கும்ளே 11 ஓட்டங்களுடனும், முரளிதரன் ஓட்டமெதையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

39.5 ஓவர்களில் ஆசிய அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 232 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிநதது.

ராவிட் ஆட்டமிழக்காமல் 71 பந்துகளில் 5 பவுண்டரிகளுடன் 75 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

112 ஓட்டங்களால் ஆசிய அணியைத் தோற்கடித்த உலக அணி சார்பில் விற்றோரி 3, வோன் 2, கெய்ன்ஸ், டரன்கோ, மக்ரா ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியில் ஆட்டநாயகனாக பொண்டிங் தெரிவு செய்யப்பட்டார்.


இந்தப் போட்டியின் மூலம் 12 மில்லியன் டொலர் நிதி சேகரிக்கப்பட்டதாக ஐ.சி.சி. தெரிவித்தது.























# 60 லட்சம் ரூபா மருந்துகளுடன் அமெரிக்க மருத்துவர்கள் வருகை!

எயர் லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சந்திரரட்ணவின் அழைப்பின் பேரில், இலங்கை வந்த 10 அமெரிக்க வைத்தியர்கள் 60 லட்சம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்களை வட - கிழக்குப் பகுதியில் குறிப்பாக முல்லைத்தீவு போன்ற பகுதிகளுக்கு வழங்க முன்வந்துள்ளனர்.

பத்து வைத்தியர்கள் அடங்கிய இந்தக் குழு - கொழும்பை வந்தடைந்தபோது, தென்பகுதிகளில் உள்ள மக்களுக்கு இந்த மருந்துப் பொருட்களை வழங்குமாறு அரசாங்கத் தரப்பில் கேட்கப்பட்டது.

இதன்படி, அவர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்டபோது, அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பணிகள் முழுமையாக வழங்கப்பட்டு, அவர்கள் நிறைவுடன் இருப்பதைக் காண முடிந்ததால், இதனால் தென்பகுதியில் தமது மருந்துப் பொருட்களை விநியோகிக்குமாறு விடுத்த கோரிக்கையை நிராகரித்துவிட்டு, பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்குப் பகுதிகளுக்கு எடுத்து வந்தனர்.

இவர்கள் நேற்றுமுன்தினம் யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருந்துப் பொருட்களை வழங்கியதுடன், அவர்களின் தேவைகள் என்ன என்பதையும் கேட்டு அறிந்துகொண்டனர்.

நிவாரணப் பணிகள் இன்னும் வடக்குப் பகுதியில் சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, இவ்வாறான தமது பணிகள் தொடரும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# வர்த்தகரை தாக்கி பணம் கொள்ளை!

திருநெல்வேலிப்பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் - கடை உரிமையாளர் ஒருவரைத் தாக்கிவிட்டு, அவரிடமிருந்த பணத்தை கொள்ளையடித்துக் கொண்டு தப்பிச்சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8.00 மணியளவில் திருநெல்வேலி அரசடி அம்மன் வீதியில் இடம்பெற்றது.

60 வயதான சி.சின்னத்துரை என்பவரே இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர் ஆவார்.

இந்த நபர் கடைக்குச் சென்று வீடும் திரும்பும் நேரத்தை அவதானித்த நபர்களே - திட்டமிட்டு பணத்தை கொள்ளையடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலையில் படுகாயமடைந்த வர்த்தகர் - தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (63)

## வல்வை நலன்புரி முகாமில்

# செயலணிக்குழுவின் பிரதிநிதி பொலிஸாரால் தாக்கப்பட்டார்!

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரி இடம்பெயர்ந்தோர் முகாமில் - விசேட செயலணிக் குழுவின் பிரதிநிதியான இராசையா இன்பதுரை என்பவர் பொலிஸாரால் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த அவர் - வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த சனிக்கிழமை இரவு சிதம்பரக் கல்லூரி நலன்புரி முகாமில் பணியில் ஈடுபட்டிருந்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் - அங்கு தங்கியிருந்தவர்களை வெளியே அழைத்துப் பதிவுகளை மேற்கொண்டிருந்தனர்.

இதற்கு விசேட செயலணிக்குழுவினர் ஆட்சேபம் தெரிவித்ததை அடுத்தே, இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முகாமில் பெண்களை வெளியே அழைத்து பதிவு மேற்கொண்டபோதே பொலிஸாருக்கும், செயலணிக்குழுவுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதன் பின்பு அந்த முகாமை விட்டு பொலிஸார் வெளியேறினர்.

இதனையடுத்து சிறிது நேரத்துக்குப்பிறகு ஜீப்வண்டியில் வந்த பொலிஸ் அதிகாரி - அங்கிருந்த இராசையா இன்பராசாவைத் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

பின்னர் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று எச்சரிக்கை செய்யப்பட்டு இவர் விடுதலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் அதிகாரிகள் குழு விசாரணை செய்து வருகிறது.

# காரைநகர் வாசிகளை உதவுமாறு கோரிக்கை

சுனாமி கடற்கொந்தளிப்பால் தொழில் உபகரணங்களையும், சொத்துக்களையும் இழந்து நிர்க்கதி நிலைக்குள்ளாக்கப்பட்டிருக்கும் காரைநகர் கடற்தொழிலாளருக்கு, காரைநகரிலிருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளிலும் மற்றும் இலங்கையின் ஏனைய பகுதிகளில் வசிப்போரையும் உதவுமாறு காரைநகர் மத்தி மேமபாட்டுக்கழகம் கோரியுள்ளது.

இது குறித்து கழகம் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் -

ஏனைய இடங்களுடன் ஒப்பிடுகையில், காரைநகரில் ஓரிரு உயிரிழப்புக்களும், காயங்களும் ஏறபட்டிருப்பதால் இதுவரை எந்த உதவிகளும் இன்றி இடம்பெயராது, உளப்பாதிப்புக்குள்ளாகி வீடுகளில் முடங்கியுள்ளனர்.

எனவே, இவ்வாறு பரிதவிக்கும் உறவுகளுக்கு உதவ விரும்புவோர் - இலங்கை வங்கி காரைநகர் கிளை நடைமுறைக் கணக்கு இல: 144 மற்றும் மக்கள் வங்கி சங்கானை கிளையில் சேமிப்புக் கணக்கு இலக்கம் 1083819 இற்கு வைப்புச் செய்துவிட்டு முழுப்பெயர், முகவரி, தொகை, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் கழக முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

# மாதகல் பகுதி மீனவர்களுக்கு உபகரணங்கள் வழங்க நடவடிக்கை

சுனாமி கடற்கொந்தளிப்பு காரணமாக பாதிக்கப்பட்ட மாதகல் பகுதி மக்களை, கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்திரு ஜெயக்குமாரும், அவருடைய உதவியாளர்களும் கடந்தவாரம் நேரடியாகச் சென்று பார்வையிட்டதோடு, 5 நாட்களுக்குரிய உலர் உணவுப் பொருட்களை அங்குள்ள கடற்தொழிலாளர் சங்கங்கள் ஊடாக வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, மாதகல் பகுதியில் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பால் கடற்தொழிலாளர்களின் தொழில் உபகரணங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிய விபரங்கள் தமது நிறுவனத்தால் சேகரிக்கப்பட்டு வருவதாகவும், அவர்களுக்கு விரைவில் தொழில் உபகரணங்கள் இலவசமாக வழங்கப் படவுள்ளதாகவும் தெரிவித்தார். (44)





IDM கணினி நிறுவனத்தின் கருத்தரங்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் நிறுவன இயக்குநர் வி.ஜெனகன் உரையாற்றுவதையும், கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவர்களையும் படத்தில் காணலாம்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## நெடுந்தீவு அரச அலுவலக தொலைபேசி செயலிழப்பு

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குரிய தொலைபேசி இணைப்பு - கடந்த பல மாதங்களாக செயலிழந்துள்ளதால், அவசர மற்றும் உடனடித் தேவைகளை மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை, அண்மையில் இடம்பெற்ற சுனாமி கடல் அனர்த்த வேளையில் இந்தத் தொலைபேசி மூலம் வெளிநாட்டிலிருந்து நெடுந்தீவின் நிலை பற்றிக் கேட்டறிய முற்பட்ட பலரும் ஏமாற்றமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (113)

## குடத்தனையில் நலன்புரி நிலையம்

வடமராட்சி கிழக்கில் மணற்காடு, குடத்தனை ஆகிய கடற்கரைப் பிரதேசங்களிலிருந்து சுனாமி கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு - குடத்தனையில் புதிதாக நலன்புரி நிலையமொன்று அமைக்கப்பட்டு வருகிறது.

சுனாமி கடற்கொந்தளிப்பால் இந்தப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து மக்கள் புலோலி மெதடிஸ்த மிஷன் கல்லூரியில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்தனர்.

இந்த நிலையில் இவர்களுக்கான உதவிகளை அந்தந்தப் பகுதி கடற்தொழிலாளர் சங்கங்களினூடாக வழங்கும் நோக்குடன், குடத்தனையில் புதிதாக நலன்புரி நிலையமொன்று அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (14)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை

வடமராட்சி வலய பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக, பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை அண்மையில் நடத்தப்பட்டது.

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற இந்த நேர்முகப் பரீட்சைக்கு 22 பேர் தோற்றியிருந்தனர்.

இவர்களில் சுமார் 15 பேருக்கு நியமனம் வழங்கவுள்ளதாக வடமராட்சிக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்தார். (12)

## வாகன அனுமதிப் பத்திரம் விநியோகம்

வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகத்தால் 2005 ஆம் ஆண்டுக்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வியாழக்கிழமை தவிர்ந்த ஏனைய நான்கு நாட்களிலும் காலை 9 மணி முதல் - நண்பகல் 12.30 மணிவரை இது இடம்பெறும்.

வரும்போது வாகனப்பதிவுப் புத்தகம், சென்றவருட வாகன வரிப் பத்திரம், காப்புறுதிச் சான்றிதழ், அடையாள அட்டை என்பவற்றைத் தவறாது எடுத்து வருமாறு பிரதேச செயலர் முரளிதரன் அறிவித்துள்ளார். (72)

## பொன்னாலையில் விஸ்ணுஹோமமும், பாற்காவடியும்

நாட்டில் அமைதி, சாந்தி, சமாதானம் வேண்டி - பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இன்று விசேட ஹோம அபிஷேகமும், பாற்காவடி நிகழ்வும் நடைபெறவுள்ளது.

பூமாதேவியின் ஊழித் தாண்டவத்தால், அண்மையில் நாட்டில் நிகழ்ந்த அனர்த்தத்தைத் தொடரவிடாமல் செய்யவும், நாட்டில் சாந்தி, சமாதானம், அமைதி என்பன ஏற்பட்டு - மக்கள் நிறைந்த வாழ்வு வாழவும் இந்த விசேட ஹோம அபிஷேக நிகழ்வு நடத்தப்படவுள்ளது.

இன்று காலை 7.30 மணிக்கு சுழிபுரம் வடக்கு சிவன் ஆலயத்திலிருந்து புறப்படும் பாற்காவடிக் கூட்டத்தினர் - பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தை வந்தடைந்ததும், ஹோம நிகழ்வு ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (207)

## சாவகச்சேரி வைத்தியசாலையில்

# போதிய இருக்கைகள் இன்றி நோயாளர்கள் பெரும் சிரமம்

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் போதிய இருக்கை வசதிகளின்றி, அங்கு சிகிச்சைபெற வரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் செல்வோரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது.

இந்த நிலையில் அங்கு சிகிச்சைக்காக நீண்டநேரம் காத்து நிற்கும் நோயாளர்கள் மயக்கமுற்று விழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அங்கு கடமையாற்றும் வைத்திய அதிகாரி மற்றும் கடமை புரியும் ஊழியர்கள், தமது தேவைக்குப் பயன்படுத்தும் இருக்கைகளை சிகிச்சைக்காக வரும் நோயாளர்களுக்கு வழங்குவதைக் காணக்கூடியதாகவுள்ளது. (29)

# சாவகச்சேரி நகர வீதிகளில் வீதி விளக்குகள் ஒளிர்வதில்லை

சாவகச்சேரி நகர வீதிகளில் இரவுவேளைகளில் வீதி விளக்குகள் ஒளிராமையால், மக்கள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளன.

இதனால் விபத்துக்கள் மற்றும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிக்கும் வாய்ப்புக்கள் உள்ளது.

கண்டி வீதியில் வாகனநெரிசல் அதிகமாகக் காணப்படுகிறது. சாவகச்சேரி நகரம் கண்டி வீதியில் இருப்பதாலும், இரவுவேளைகளில் வீதி விளக்குகள் இன்மையாலும் வபத்துச் சம்பவங்கள் ஏற்படுகின்றன.

இதனால் இந்த வீதியை மையமாகக்கொண்டு, நகரசபை எல்லைக்குள் வசிக்கும் மக்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர்.

1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் சாவகச்சேரி நகரிலிருந்து புத்தூர் சந்தி வரைக்கும், அதேபோன்று சாவகச்சேரி நகரிலிருந்து நுணாவில் சந்தி வரைக்கும் உள்ள நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், வீதி விளக்குகள் ஒளிர்ந்தன. பின்னர் ஏற்பட்ட யுத்த நிலைமை காரணமாக இவை செயலிழந்தன.

தற்போது இந்தப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளபோதும், இன்னும் வீதி விளக்குகளை பொருத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இது குறித்து சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இந்தப் பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர்.




# பனிச் சிறுத்தைகள்

மத்திய ஆசியாவில் சிறுத்தைப் புலிக்குட்டிகள் திடீரென அழியத் தொடங்கியிருக்கின்றன. கூடுதலாக உஸ்பெகிஸ்தான், கஜகஸ்தான், கிர்கிஸ்தான் ஆகிய இடங்களிலேயே அதிகமாகச் சிறுத்தைப் புலிக்குட்டிகள் காணப்படுகின்றன. இவற்றை வேட்டையாடுவதைத் தடுப்பதற்கான ஒரு திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது. கிட்டத்தட்ட 2006 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இது ஓரளவு வெற்றியளிக்கும் என எதிர்பார்க்கப்பட்டு வருகிறது. இங்கே காணப்படுகின்ற சிறுத்தைகள் குளிர் பிரதேசத்துக்குரியவை. இவை மிகவும் குளிர்ச்சியான தோற்றத்தையுடையன. இவற்றின் அழிவுக்குரிய முதலாவது காரணமாக வேட்டைக்காரர்களுடைய படையெடுப்புக் கூறப்படுகிறது.



அண்மையில் பறிமுதல் செய்யப்பட்ட 200 பனிச் சிறுத்தைகளின் தோல்கள், இதற்கான ஆதாரமாக இருக்கிறது. தற்போது இந்தப் பிரதேசம் கடுங்காவலுடன் காணப்படுகிறது. இங்கே சில இடங்களில் இராணுவப் பாதுகாப்புப் போடப்பட்டிருக் கிறது. தற்போது சிறுத்தைகளை வேட்டையாடுவதற்கான அனுமதி முற்றுமுழுதாக நிறுத்தப்பட்டிருக்கிறது.

# ஆளுநரின் அதிரடி




கணினி உலகில் சட்டவிரோதமான முறையில் கணினி மென்பொருட்களின் பாவனை மற்றும் விற்பனை ஆகியவற்றை முற்று முழுதாக இல்லாதொழிக்கும் முயற்சிகளில் கலிபோர்ணியா மாநிலம் முன்னிற்கிறது. அந்த மாநில ஆளுநர் நடிகர் ஆர்னோல்ட்டின் அதிரடி நடவடிக்கைகளால் பல கணினி மென்பொருள் நிறுவனங்கள் முடக்கப்படக்கூடிய நிலைக்குப் போகக்கூடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாவனையாளர்கள் இந்தச் சட்டவிரோதமான கணினி மென்பொருட்களால் கிட்டத்தட்ட ஆயிரம் டொலர்கள் வரையில் நஷ்டப்படுகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. ஆளுநருடைய கட்டளைப்படி 28 வித்தியாசமான துப்பறியும் கணினி மென்பொருள் அமைப்பு நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது பாவிக்கப்படுகின்ற எல்லாக் கணினிகளிலும் காணப்படுகின்ற சட்டவிரோதமான கணினி நிகழ்ச்சித் திட்டங்களைத் துப்பறியக் கூடியவாறு இவை காணப்படுகின்றன. இதேவேளை ஆளுநரின் இத்தகைய முயற்களுக்கு எதிர்ப்பலைகள் தோன்றியிருப்பதாகவும் கூறப்படுகிறது. ஆனாலும் இவற்றை எல்லாம் பொருட்படுத்தாது, உலகின் முன்னணிக் கணினியமைப்பு மாநிலமாக்குவதற்கு நடிகர் மற்றும் ஆளுநர் ஆர்னல்ட்டின் முயற்சி பாராட்டுதலுக்குரியது.

# சாவைத் தரும் குளிகை



ஐரோப்பிய நாடுகளில் பாவிக்கப்படுகின்ற எல்லா மருந்துகளும் அங்கீகரிக்கப்பட்டே கொடுக்கப்பட வேண்டும் என்ற ஒரு கருத்து நிலவுகின்றது. ஆனாலும், அங்கீகரிக்கப்படாத சட்டவிரோதமான மருந்துகளும் சந்தையில் உலாவரத்தான் செய்கின்றன. புரோஜக் என்ற ஒருவகையான மருந்து வில்லை மிகவும் நஞ்சுத்தன்மை வாய்ந்தது. இது ஆட்களைக் கொல்லுவதற்கு ஐரோப்பிய நாடுகளில் பயன் படுத் தப்படுகின்ற குளிகையாகும்.

இதேவகையான வில்லைகள் *1989* ஆம் ஆண்டு அமெரிக்காவில் *8* பேரைக் கொல்வதற்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது. இதேபோல் *12* பேர் வரை இந்தக் குளிகைகளை உட் கொண்டு சாவிலிருந்து போராடியிருக்கிறார்கள். *1994*ஆம் ஆண்டில் இந்தக் குளிகையை உற்பத்தி செய்யும் கம்பனி கண்டுபிடிக்கப்பட்டு, இதற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டது. அதன் பிறகு இந் தக் குளிகைகள் சில வருடங்களுக்கு உலக சந்தையில் தென்படாமல் இருந்தன. ஆனால் இப்போது சில இறப்புக்களுக்கு இந்தக் குளிகை பயன்படுத்தப்பட்டிருக்குமா? என்ற சந்தேகம் மருத்துவர்களிடையே எழுந்திருக்கிறது. ஏனெனில் இந்த மரணங்களுக்கு இந்த மருந்தின் தாக்கம் காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது


# நீரிழிவுக்குரிய உணவு



பாண், பணிஸ் போன்ற உணவுகள் – நீரிழிவு நோயை அசாதாரணமான முறையில் அதிகரிக்கும் எனக் கூறப்படுகிறது. அமெரிக்க விஞ்ஞானிகளின் ஆய்வுகளின்படி இவை இன்சுலினைச் சுரக்கவிடாது, தொடர்ச்சியாகத் தடுத்துக் கொண்டிருக்கின்றன. பொஸ்டன் சிறுவர் வைத்தியசாலையில் மட்டும் 3 ஆயிரம் சிறுவர்களைக்கொண்டு செய்யப்பட்ட ஆராய்ச்சிகளின்படி, இப்படியான உணவு ஊட்டத்தை ஏறக்குறைய 15 வயதுக்கு மேற்பட்ட எல்லாச் சிறுவர்களும் செய்கின்றார்கள் எனலாம். 2001 ஆம் ஆண்டு ஐரோப்பாவில் மட்டும் செய்யப்பட்ட ஆய்வுகளின்படி, 21% ஆண்களும் 23.5% பெண்களும் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தெரிந்தோ, தெரியாமலோ தொடர்ச்சியாக இந்தவகைப் பாணுணவுகளைச் சாப்பிட்டிருப்பது இப்போதுதான் தெரியவருகிறது. தற்போது ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளில் சிற்றுண்டிச்சாலைகளில் இப்படியான பாணுணவுகளின் விற்பனை குறைக்கப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக கஞ்சி மற்றும் பழங்கள் அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவை மக்கள் மத்தியில் அதிக மதிப்பையும் பெறுகின்றன.

# நாய்களிடம் சிகிச்சை


புற்றுநோய்ச்சிகிச்சை முறைகள் தற்போது நாய்களுக்குச் செய்து பார்க்கப்பட்டு வருகின்றன. மனிதர்களுக்கும், நாய்களுக்குமிடையிலான பல்லாயிரக்கணக்கான வருடத் தொடர்பு இந்த நோய்ச்சிகிச்சை ஆராய்ச்சிக்கு ஓரளவு வெற்றியைத் தரும் என எதிர்பார்க்கலாம் என, மருத்துவ உலகின் விஞ்ஞானிகள் கூறிக்கொண்டிருக்கிறார்கள். மனிதர்களுக்கும், நாய்களுக்கும் ஏற்படுகின்ற பெரும்பாலான நோய்கள் ஒத்த இயல்புடையனவாகவே காணப்படுகின்றன. அத்துடன் பெரும்பாலான நோய்களுக்கு நாய்களிலேயே சிகிச்சை செய்யப்பட்டு, மனிதர்களுக்கு கொடுக்கப்பட்டு, வெற்றியும் பெறப்பட்டிருக்கிறது.



தற்போது மனிதனுடைய டி.என்.ஏ மற்றும் நாயினுடைய டி.என்.ஏ ஆகியன ஒன்றாக எடுக்கப்பட்டு, சிறுநீரகப் புற்றுநோய்ச் சிகிச்சைக்காக ஆராய்ந்து பார்க்கப்பட்டு வருகின்றன. இதில் என்ன அதிசயம் என்றால், நாய்களுக்கு வந்திருக்கின்ற புற்றுநோய்கள் மாற்றப்படக் கூடியவையாக வும், சிசிச்சைப் பலனுள்ளவையாகவும் காணப்படுகின்றன.

ஆனால் மனிதர்களுக்கு எந்த ஒரு மருந்தும் முற்று முழுதாகப் புற்றுநோயைக் குணமாக்கக் கூடியவாறு இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை.

# திமிங்கலங்களின் அகால மரணம்



கடலிலே காணப்படுகின்ற வளைவுப் பாதைகளால் அதிகம் பாதிப்புறுவது திமிங்கலங்கள் தான் என்று ஒரு கூற்று தற்போது கூறப்படுகிறது. பயங்கரமான பாரிய திமிங்கலங்கள் கடலிலுள்ள பாறைகளுடன் மோதும் போது, அவை இறக்க நேரிடுகின்றன. அவற்றின் வேகம் மற்றும் பாரிய நிலை ஆகிவற்றைக் கருத்திற்கொள்ளும் போது, அவை பரிதாபத்துக்குரியவையாகவே காணப்படுகின்றன. சிலவேளைகளில் இந்தத் திமிங்கலங்கள் காயப்படுகின்றன. அத்துடன் இவற்றின் காயத்தின் மூலம் நோய்க் கிருமிகள் பரவுவதற்கும் கூடிய வாய்ப்புகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. கடலிலிருந்து எடுக்கப்பட்ட பல திமிங்கலங்களின் எலும்புக் கூடுகள் மிகவும் அரிதானவையாகவும், அத்துடன் திமிங்கலங்களின் வாழ்க்கை முறை மற்றும் நோய்கள் என்பனபற்றி அறியக் கூடியனவாகவும் காணப்படுகிறது. ஆராய்ச்சியாளர்களின் கருத்துப்படி, திமிங்கலங்கள் மிக நீண்ட காலத்துக்கு உயிர்வாழக் கூடியவை. அவற்றின் மூலம் மனிதனுக்குக் கிடைக்கும் நன்மைகளை விடத் தீமைகளே ஏராளம் எனக் கூறப்படுகிறது.

## திரை விமர்சனம்

# ஜெய் சூர்யா



விஜய் நடித்து வெளிவந்த மதுர படத்தின் மறுவடிவம்தான் இது. இதில் அர்ஜுன் இரு வேடங்களில் நடித்திருக்கிறார். ஒன்று ரவுடி மற்றையது கலெக்டர்.

தாதா அர்ஜுனின் காதலியாக லைலா வருகின்றார். அவருக்கு உதவியாளராக வடிவேலு இருக்கிறார். காஞ்சிபுரம் கலெக்டரான இன்னொரு அர்ஜுனைத் தாதா கசன்கான் கொலை செய்ய முயற்சிக்க, தனது எதிரியாகிய கசன்கான் அவரைக் கொல்லக்கூடாது என்பதால், கலெக்டரைக் காப்பாற்றுகிறார். எம்.எல்.ஏயாக டி.பி கஜேந்திரனும், மந்திரியாக ராஜ்கபூரும் வருகின்றனர்.




கலெக்டருக்கு முறைப்பெண் சாயாசிங். அவர் தாதா அர்ஜுனைக் கலெக்டராக நடிக்கச் சொல்கிறார். இதன்மூலம் ஒரு கொலைப்பழியில் கலெக்டர் சிக்கிக் கொள்கிறார். இதிலிருந்து அர்ஜுன் எப்படித் தப்பித்தார். இது தான் மீதிக்கதை.

முதல்வர் முன்னாலேயே ராஜ்கபூரை வருங்கால முதல்வர் எனக்கூறி, அவராகவே முதல்வர் பதவியை விட்டுப்போக வைக்கிறார். லைலாவும், சாயாசிங்கும் சும்மா வந்து போகிறார்கள். வடிவேலுவின் நகைச்சுவை மட்டும் மனதில் நிற்கிறது. ஒளிப்பதிவு விமர்சிக்கத்தக்களவு ஒன்றுமில்லை. தயாரிப்பு மற்றும் இயக்கம் மனோஜ்குமார் உண்மையில் இந்தப் படத்தில் என்ன இருக்கிறது என்றே தெரியவில்லை. "ஜெய் சூர்யா" – ரன் அவுட்.

–காயா–

# தொல்லை தரப்போகும் மீன்கள்

மீன்களைப் பொறுத்தவரை அவற்றுக்குக் கடல் ஒரு சிறிய உலகம் தான். ஏனெனின் அவற்றுக்கு எங்கு பார்த்தாலும் கடல் தான் தெரியும். உண்மையில் மீன்கள் ஞாபக மறதி மிக்க உயிரினங்கள் என ஆய்வாளர்களால் கூறப்படுகிறது. ஏனெனில் அவற்றின் ஞாபகப்படுத்தும் திறன் - மிகவும் குறுகியதாகத் தான் இருக்கிறது. லீட்ஸ் பல்கலைக்கழகத்தில் இந்த விடயங்களை எல்லாம் ஒரு குழு ஆராய்ந்து கொண்டிருக்கிறது. இந்தக் குழுவின் முடிவுகளின்படி, கடல் வாழ் உயிரினங்கள் யாவும் ஒரே சூழலில் வாழ்வதால் அதாவது - கடல் என்ற சூழலில் வாழ்ந்து கொண்டிருப்பதால் அவற்றின் நடத்தையில் மாற்றங்கள் மிகவும் குறைவாகவே ஏற்படுகின்றன. அத்துடன் இன்னொரு பார தூரமான விடயம் எதுவெனில், சமூக நோய்களைக் கடத்தக் கூடிய ஆற்றல் கொண் டவையாகவும் இவை காணப்படுகின்றன. இதன் காரணமாகக் கடல் வாழ் உயிரினங்கள் என்றாலே மக்கள் ஓடி ஒளியும் அளவுக்கு இவற்றின் தாக்கம் இருக்கிறது.தற்போது எமது நாட்டில் சுனாமி அலையின் தாக்கம், மக்களை மீன்பக்கம் தலைவைத்துப்படுக்க விட்டாமல் செய்ததுபோல உலகளாவியரீதியில் நடந்தாலும், ஆச்சரியப்படுவதற்கில்லை.



# கண்நோய்க்கு மருந்து


எல்லாவகைக் கண்நோய்களுக்கும் ஒரே மருந்து - சிகிச்சை தரமாட்டாது.



பலதரப்பட்ட நோய்கள் இருந்தாலும், கண் வைத்தியர்கள் ஒரே ஒரு மருந்தையே கூடுதலாகச் சிபாரிசு செய்கிறார்கள். இதற்குரிய காரணம் கண்களினுடைய கலங்களுக்கேற்றவாறு அவர்களால் மருந்துகளைச் சிபாரிசு செய்ய முடியாமல் இருப்பதுதான். இங்கிலாந்திலிருந்து கிடைத்த தகவல்களின்படி, 50 வயதுக்கு மேற்பட்ட மக்களில் கூடுதலானவர்கள் தங்களுடைய கண்பார்வையை இழந்திருக்கின்றார்கள். இதற்கு ஒருகாரணம் - கண்ணுக்கு அவர்கள் கண்டகண்ட மருந்துகளைப் பாவித்தமைதான் என மருத்துவ விஞ்ஞானிகள் ஆணித்தரமாக அடித்துக் கூறுகிறார்கள். இதே வேளை, கண்ணுக்குப் பாவிக்கின்ற மருந்துகளால் சில பக்கவிளைவுகளும் ஏற்படுகின்றன. ஏஎம்டி என்ற ஒருவகையான கண் மருந்து தற்போது ஐரோப்பிய நாடுகளில் அமோகமாக விற்பனையாகிக்கொண்டு வருகிறது. இது அமெரிக்க நாட்டால் கடந்த மாதம்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. இருந்தபோதிலும், இது வயது முதிர்ந்தவர்களின் கண்பார்வைக் குறைவை நிவர்த்தி செய்வதற்கு ஓரளவு உதவும் என எதிர்பார்க்கலாம்.

# பறவைகளின் ஒலியின்பம்


பறவைகளில் யார் முதலில் நித்திரைவிட்டு எழுவ்து என்ற போட்டியில், கரியநிறப் பறவை ஒன்று முதலிடத்தை வகிக்கிறது. இது 13 நிமிடங்கள் சூரியன் உதித்த பின் எழுவதாகக் கூறப்படுகிறது. ஏறக்குறைய 5500 மக்கள் இந்தப் பறவைகள் தான் முதலில் எழுகின்றன என்பதை ஒத்துக் கொள்கிறார்கள். இதற்கு அடுத்ததாக றொபின், புளூடிட், சோங்திரஸ் ஆகிய பறவையினங்கள் நித்திரைவிட்டு எழுவதாகக் கூறப்படுகிறது. இறுதியாக எழுகின்ற பறவையினங்களில் டன்னொக் பறவை எனவும் கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன.



இந்தப் பறவை இனங்களால் மனிதர்களுடைய வாழ்க்கையில் புத்துணர்ச்சி ஏற்படுகிறது. அத்துடன் இவற்றின் காலை நேர ஒலியலைகள் மனிதர்களின் உளவியல்ரீதியான தாக்கத்தைக் குறைப்பதாகவும் கூறப்படுகிறது. மிகப் பரிய பொருட்டுக்களைக் கொண்ட மரங்கொத்திகள் கோலட்பின்ச் கிறீன்பின்ச் ஸ்டார்லிங், போலாரெட்டவ் ஆகியன தூங்கி வழியும் பறவையினங்களுக்கான உதாரணங்களாகக் கருதப்படுகின்றன. இவை மிகவும் தாமதமாகவே எழுகின்றபடியால் இவற்றில் ஒலியலைகள் மக்களின் காதை வந்தடைந்து மிகவும் தாமதமாகிறது எனக் கூறப்படுகிறது. ஆனாலும் பறவைகளின் ஒலியில் கிடைக்கும் இன்பமே இன்பம் தான்.

# இராட்சத கரப்பொத்தான்

சாதாரணமாக வீடுகளில் காணப்படுகின்ற கரப்பொத்தான்களைவிட, மிகப்பெரிய இராட்சதக் கரப்பொத்தான்கள் போர்னியோ என்ற இடத்திலுள்ள காடுகளில் காணப்படுவதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இது ஏறக்குறைய 10 சென்ரிமீற்றர் நீளமுடையதாகக் காணப்படுகிறது. இந்தவகைக் கரப்பொத்தான் இனங்களைக் கண்டுபிடிப்பது மிகவும் கடினம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனாலும், இத்தகையதை ஒத்த ஒரு வகையான கரப்பொத்தான்கள் இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவுக்கு வடமேற்குப் பக்கமாக இருக்கின்ற ஒரு காட்டுப் பிரதேசத்தில் காணப்படுவதாகவும் கூறப்படுகிறது. இவற்றை நேரடியாக ஆய்வு செய்வது என்பது மிகவும் கடினமான காரியம் எனவும், மறைமுகமாகவே அதாவது - சட்டபூர்வமற்ற முறையில்தான் இவற்றின் ஆய்வுகளை மேற்கொள்ள முடியும் என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அடர்ந்த காடுகளில் அதாவது - பயங்கரமான காடுகளில் இத்தகைய கரப்பொத்தான்கள் வாழ்வதால், இவற்றின் உண்மைத் தன்மையை அறிவது மிகவும் கடினமானதாக இருக்கிறது.



# வைரஸ் தாக்கிய மொபைல் போன்கள்

கையடக்கத் தொலைபேசிகள் மூலம் வைரஸ்களைப் பரப்பக்கூடிய அதிகமான தொழில்நுட்பங்கள் இப்போது காணப்படுகின்றன. தற்போது காணப்படுகின்ற அதிநவீன கையடக்கத் தொலைபேசிகளில் புளூடூத் எனப்படும் ஒரு தொடர்பு அமைப்பு மூலமே இந்தச் செயற்பாடுகளை எல்லாம் செய்யக் கூடியதாக இருக்கிறது. தற்போது காணப்படுகின்ற சிம்பியன் சீரிஸ் 60 கைடக்கத்தொலைபேசிகளில் இந்த வசதிகள் காணப்படுகின்றன. நொக்கியா என் கேஜ் கியூடி நொக்கியா 3230, 3650, 3600, 6260, 6600, 6620, 6670, 7610, 7650 பனசொனிக் எக்ஸ் 700, சாம்சங் எஸ் ஜி.எச்.டி 700/ டி 710 சென்டோ எக்ஸ் சீமன்ஸ் எஸ் எக்ஸ் ஆகிய மொடல்கள் இலகுவில் வைரஸ் தாக்கத்துக்குட்படக் கூடிய கையடக்கத் தொலைபேசிகளாகக் காணப்படுகின்றன. சிம்பியன் சீலியல் 60 கணிணி மென்பொருள் சில குறிக்கப்பட்ட கையடக்கத் தொலைபேசி நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. முதலில் கையடக்கத் தொலைபேசிகளின் பற்றரிகளையே இந்தவகை வைரஸ்கள் பாதிப்ப தாகக் கூறப்படுகிறது, கபில் எனப்படும் இந்தக் கொடிய வைரஸ் மூலம் கையடக்கத் தொலைபேசிகளை வெடிக்க வைக்கவும் முடியும் எனத் தொழில் நுட்பவியலாளர்கள் அடித்துக் கூறுகிறார்கள்.



# கரையோரத்தில் மக்களை மீள்க்குடியமர்த்துவதால் உயிருக்கும், உடமைக்கும் உத்தரவாதமில்லை

## அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதங்களின் பெறுமதி சுமார் 3 ஆயிரத்து 800 மில்லியன் ரூபா என முல்லைத்தீவு அரசாங்க அதிபர் மேரி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அழிவுக்குள்ளான பகுதிகளின் தனியார் சொத்துக்களை நாங்கள் பார்ப்போமானால் - இந்த மாவட்டத்துக்கு ஏற்பட்ட பாரியதொரு இழப்பாகவே கருதவேண்டியுள்ளன.

கடல் அனர்த்தம் ஏற்படுவதற்கு சில வாரங்களுக்கு முன்பாக மீன்பிடித்தொழிலை மேற்கொள்பவர்கள், இறால் பிடிப்பு மூலம் அதிகரித்த வருமானத்தைப் பெற்றிருந்தார்கள்.

அவர்கள் பெருமளவு பணத்தைக்கூட வீடுகளில் வைத்திருந்தார்கள். இவை எல்லாம் கடலோடு அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

வீடுகள், உடைமைகள், சொத்துகள் அழிக்கப்பட்டுள்ளது.

வட்டுவாகல், சின்னத்தங்காடு, கேப்பாபிலவு போன்ற பாலங்கள் விரைவாக திருத்தம் செய்யப்பட வேண்டியுள்ளன.

இந்தப் பகுதி மக்களுக்கான உணவுகள் - இந்த பாலங்கள் ஊடாகவே வரவேண்டும். வட்டுவாகல் பாலத்துக்கு மண்மூடைகள் அடுக்கப்பட்டு, போக்குவரத்து நடைபெறுகிறது.

மண்மூடைகள் அகற்றப்படுமானால், புதுக்குடியிருப்புக்கான போக்குவரத்து துண்டிக்கப்படக் கூடிய நிலைதான் ஏற்படும்.

முல்லைத்தீவில் சுமார் 3 ஆயிரத்து 500 கடற்தொழில் செய்யும் குடும்பங்கள் வாழ்ந்ததாக கடற்தொழில் உதவிப் பணிப்பாளார் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

அவர்களுடைய 400 மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் அழிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

பாடசாலைகளில் தான் நலன்புரி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

மாற்று இடங்களைத் தெரிவு செய்து, இவர்களுக்கான இருப்பிடங்கள் அமைக்கப்படவேண்டியுள்ளது. அதில் நாங்கள் கவனம் செலுத்தியுள்ளோம்.

அலையால் அடித்துச் செல்லப்பட்ட பிரதேசங்களில் மக்கள் குடியேற முடியாது. அந்த இடங்களைத் தவிர்த்துத்தான் மக்களை நாங்கள் குடியேற்றவேண்டியுள்ளது.

மக்கள் திரும்பவும் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்ற சிந்தனை எமக்கு உண்டு.

இந்த அனர்த்தத்தால் கிராமங்களில் எதுவுமே மிஞ்சாத பல இடங்கள் உள்ளன.

கரையோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் - ஒரு கிராமத்தைத் தாண்டி, மூன்றாவது கிராமத்துக்குக் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

கடற்தொழில் செய்பவர்களுக்கான எந்த உபகரணங்களுமே கிடையாது.

அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டது. இந்த அனர்த்தத்தால் கடல் சற்று முன்னுக்கு வந்துள்ளன.

இதனால் கரையோரத்தில் மக்களை மீளவும் குடியமர்த்துவதால் அவர்களுடைய உயிருக்கு, உடைமைகளுக்கும் பாதுகாப்பு உத்தரவாதம் இல்லை.

அவர்கள் தொழில் செய்யக் கூடியதும், பொருத்தமானதும் பாதுகாப்புமிக்கதுமான இடங்களில்தான் பாதிக்கப்பட்டவர்களை குடியமர்த்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## முதலாம் தவணை ஆரம்பம்

(முல்லைத்தீவு)

சுனாமி கடற்கொந்தளிப்பால் முல்லைத்தீவு வலய பாடசாலைகள் பல - நலன்புரி நிலையங்களாக இயங்கிவருவதால், இந்த வலயத்துக்குட்பட்ட பாடசாலைகள் முதலாம் தவணைக்காக எதிர்வரும் 17 ஆம திகதிக்கு முன்னதாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் குருகுலராஜா தெரிவித்தார்.




# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குழமுனையில் சர்வமத வழிபாடு

சுனாமி அனர்த்தத்தால் உயிரிழந்தவர்கள், உறவுகளின் இழப்புக்களின் துயரில் மூழ்கியுள்ளவர்கள் மற்றும் உடல், உள ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வமத வழிபாடொன்று இன்று மாலை 4 மணிமுதல் இரவு 9 மணிவரை குமுழமுனை புனித அந்தோனியார் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்படியான கொடூரம் இனியும் எமக்கு வேண்டாம் என்று, இறைவனிடம் குரல் எழுப்பி மன்றாடித் தியானிக்க - கத்தோலிக்க, இந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ மதப் பெரியார்கள் இணைந்து இந்த சர்வமத வழிபாட்டை முன்னெடுக்கவுள்ளனர்.

# அக்கராயன் பிரதேச விவசாயிகளுக்கு விவசாய உள்ளீடுகள் வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழ், மாவட்ட விவசாயத் திணைக்களத்தால், அக்கராயன் பிரதேசத்திலுள்ள பயனாளிகளுக்கு வீட்டுத் தோட்டத்துக்குரிய விதைகள், மாங்கன்றுகள், பலாக்கன்றுகள் ஆகியன வழங்கப்பட்டன.

இந்த மாவட்ட விவசாயத் திணைகளத்தால் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன், தெரிவு செய்யப்பட்ட 300 பயனாளிகளுள் அக்கராயன் பிரதேசத்தைச் சேர்ந்த 30 பயனாளிகளுக்கே இவை வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு அண்மையில் அக்கராயன் கமநல அபிவிருத்தி நிலையத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி. ஆனந்தராசா, விவசாய போதனாசிரியர்களான - ச.தம்பிராசா, க.கணேசலிங்கம், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன அக்கராயன் பிரதேச இணைப்பாளர் ம.ஜெயபாலன், கமநல சேவை உத்தியோகத்தர் பு.சுலோசனா மற்றும் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# வன்னியில் 200 சிறுவர்களை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை பராமரிக்க முன்வந்துள்ளது!

(கிளிநொச்சி)

வன்னிப்பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 200 சிறுவர்களை 20 வருடங்களுக்கு, பூரண பராமரிப்பை மேற்கொள்ளவும், விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் சர்வதேச தரத்துடனான விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்துத் தருவதாகவும், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் சுனாமி அனர்த்த உதவி ஏற்பாட்டுக் குழுத்தலைவர் திலங்க சுமதிபால தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்கு விஜயம் செய்த இவர் - கிளிநொச்சி அரசியற்துறை நடுவப்பணியகத்தில் துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா ஆகியோரைச் சந்தித்தபோதே அவர் இவவாறு தெரிவித்தார்.

இலங்கைக் கிரிக்கெட் வீரர்களின் தனிப்பட்ட நிதி உதவியைக் கொண்டு, பாதிக்கப்பட்ட 50 குடும்பங்களுக்கு முழுமையான வீடமைப்புத் திட்டம் ஒன்றை அமைத்துத் தருவதாகவும் - தாய், தந்தையை இழந்த 200 சிறுவர்களுக்கு 20 வருடங்களுக்கு சுகாதார, உளவியல் பராமரிப்புகள் உட்பட அனைத்துப் பராமரிப்புகளையும் மேற்கொள்வதாகவும், சர்வதேச தரத்துடன் கிரிக்கெட் மைதானம் ஒன்றைத் தமது செலவில் அமைத்துத் தருவதாகவும் திலங்க சுமதிபால உறுதியளித்தார்.

விடுதலைப்புலிகளின் தலைமைத் திட்டமிடல் பிரிவுடன் கலந்துரையாடி, அவர்களின் முடிவுக்கு அமைய இந்தப் பணிகளை மேற்கொள்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

நவீன கிரிக்கெட் மைதானத்தை 10 கோடி ரூபா செலவில் அமைக்கவுள்ளதாகவும், தமது முதற்கட்டச் செயற்பாடாக 25 குடும்பங்களுக்கு நவீன வசதிகளைக்கொண்ட தற்காலிக இருப்பிடங்களையும், நிவாரணப் பொருட்களையும் வழங்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உபதலைவர் மற்றும் கிரிக்கெட் வீரர்கள் சிலரும் கலந்துகொண்டனர்.

## லயன்ஸ் கழகத்தால் உதவிப் பொருட்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு - கொழும்பு லயன்ஸ் கழகத்தால் உதவிப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்த உதவிப் பொருட்களில் அரிசி, பருப்பு, பால்மா பைக்கற்றுக்கள், ஆண், பெண், சிறுவர்களுக்கான உடைகள், படுக்கை விரிப்புக்கள் போன்றன அடங்குகின்றன.

# நியாப் திட்டம் II இன் கீழ் 2005 ஆம் ஆண்டு புனரமைப்புக்கென கிளிநொச்சியில் 25 கிராமங்கள் தெரிவு

கிளிநொச்சி மாவட்டத்தில் 2005 ஆம் ஆண்டுக்கான புனரமைப்புக்கென, நியாப் II இன் கீழ் 25 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்தக் கிராமங்களின் வீதிகள், பொது மண்டபங்கள், பொதுக் கிணறுகள், குளங்கள் போன்றன புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இதேவேளை, இந்தக் கிராம மக்களுக்கான ஜீவனோபாயக் கடன்களும் வழங்கப்படவுள்ளன.

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் - கிருஷ்ணபுரம், கண்ணகிபுரம், பன்னங்கண்டி, பெரியவிளான், அக்கராயன் கிழக்கு, ஸ்கந்தபுரம் ஆகிய கிராமங்களும் - பூநகரிப் பிரதேச செயலக பிரிவில் - நல்லூர், நெடுங்குளம், செட்டிய குறிச்சி, கறுக்காய்த்தீவு, சித்தன் குறிச்சி, ஆலங்கேணி, ஞானிமடம், நெற்புலவு போன்ற கிராமங்களும்- புலோப்பளை, முல்லையடி, பெரியபளை, மல்வில் ஆகிய கிராமங்களும், கண்டாவளைப் பிரதேச செயலக பிரிவில் - பெரிய குளம், மயில் வாகனபுரம், தர்மபுரம் மேற்கு, குமாரசாமிபுரம், குமரபுரம், நாவல்நகர் ஆகிய கிராமங்களும் புனரமைப்புக் கென தெரிவுசெய்யபபட்டுள்ளன. இந்தக் கிராமங்கள் அடிப்படை வசதிகளற்றதாக காணப்படுவதால், புனரமைப்பின்மூலம் ஓரளவு நிறைவு பெறும் என இந்தப் பகுதி மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# கிளிநொச்சி பதிவாளர் செயலகத்தின் நிழற்பட இயந்திரம் பழுதடைந்துள்ளது

கிளிநொச்சி மாவட்ட பதிவாளர் செயலகத்தின் நிழற்பட இயந்திரம் பழுதடைந்துள்ளதால், மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த செயலகத்தில் தமது பதிவுகளை மேற்கொள்வதற்கு வரும் மக்கள் - தமது பதிவுப் பிரதிகளைக் குறித்த தவணைகளில் பெற முடியாது உள்ளது எனவும்-

இதற்கு நிழற்பட இயந்திரம் பழுதடைந்து விட்டமையே காரணம் எனவும் செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் செயலகத்தின்மூலம் பெருந்தொகையான மக்கள் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகக் காத்திருக்கின்றனர்.

இது சம்பந்தமாகப் பதிவுச் செயலக உத்தியோகத்தரிடம் கேட்டபோது, இங்கு பதிவுச் செயற்பாடுகள் தொண்டர்கள் மூலமே மேற்கொள்ளப்படுகிறது.


இங்கு நிரந்தர பதிவாளர்கள் போதியளவு இல்லை. இது தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியபோதும், அவர்கள் இது தொடர்பாக எந்த விதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

எனினும், தொண்டர்கள் மூலம் மக்களுக்கான பதிவுச் செயற்பாடுகளைச் செய்து வருகிறோம்.

தற்போது யுனிசெப் நிறுவனத்தினரால் வழங்கப்பட்ட இயந்திரமும் பழுதடைந்து, திருத்துவதற்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதனால் பதிவுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

அது தொடர்பான ஆவணங்களை, நிழற்பிரதி எடுக்கவேண்டிய தேவை உள்ளது. எனவேதான் பதிவுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

மேலும் எமது பதிவுகளை சரிவரத் தாமதமின்றி செய்வதற்கு ஒரு நிழற்பட இயந்திரம் போதாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.




ஜனவரி 11

1921 :- உலகில் முதலாவது பெண் நீதபதி மிஸ் மேரி கொன்ஸ்டன்ஸ் இன்று நியமிக்கப்பட்டார். லண்டனில் ஓல்ட் பெயிலி நீதிமன்றத்தில் இவரது சத்தியப் பிரமாண நிகழ்வு நடைபெற்றது.

1922 :- நீரிழிவு நோய்க்கு இன்சுலின் சிகிச்சை இன்றுதான் முதன் முதல் அறிமுகப்படுததப்பட்டது. டொரணரோ பொது மருத்துவமனையில் நீரிழிவு நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்த 14 வயது சிறுவனுக்கு முதன்முதலாக இந்தச் சிகிச்சை வழங்கப்பட்டது.

1924 :- கிரேக்கக் குடியரசு இன்று உதயமாகியது. கிரேக்கத்தின் மன்னராயிருந்த இரண்டாம் ஜோர்ஜ் பதவியிலிருந்து துரத்தப்பட்டார்.

1990 :- தமிழீழ விடுதலைப் புலிகளின் மகளிர் படையணியின் முதலாவது தளபதி மேஜர் சோதியா மூளைக்காய்ச்சலால் சாவைத் தழுவிக்கொண்ட நாள்.

2004 :- கலை பண்பாட்டுக்கழக நடன, நாடகக் கலைஞர்கள் தேசியத் தலைவரால் கௌரவிக்கப்பட்ட நாள் இதுவாகும்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பவும் நாணும் ஒருங்கு.

திருக்குறள்

# நமது நோக்கு

## கொபி அனானின் விஜயமும்; அது கூறும் செய்திகளும்!

கடைசியில் 'சுனாமி'யால் இலங்கையிலேயே மிக மோசமாகப் பாதிப்புக்குள்ளான வட பகுதிக்கு வராமலேயே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர், இலங்கைக்கான தனது விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பிச் சென்றுவிட்டார்.

இதனை இன்னும் சரியாகச்சொல்வதானால், அவர் வடபகுதிக்குச் சென்று, அங்குள்ள நிலைமைகளை, 'சுனாமி' ஆழிப்பேரலை விளைவித்த அனர்த்தத்தின் எதிரொலிகளை நேரில் பார்வையிட விருப்பார்வம் கொண்டிருந்த போதிலும், இலங்கையின் அதி உத்தம ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதற்கான அனுமதியை அவருக்கு வழங்க மறுத்து, அவருக்கேயுரிய பௌத்த சிங்கள தார்மீகப் பண்பைப் பகிரங்கப்படுத்திவிட்டார் என்றே கூறவேண்டும்.

இது வடபகுதி மக்களை எந்த அளவுக்கு இந்த அரசும், அரசின் அதிகாரத்தலைமையும் உதாசீனம் செய்கினறதென்பதற்கு மிகச் சிறந்த உதாரணமாகும்.

அல்லல்பட்டு, ஆற்றாது அழுது நிற்கும் மக்களின் துன்பதுயரங்களை நேரில் பார்த்து அவர்களின் நிலையை மதிப்பீடு செய்து, அவர்களின் புனர்வாழ்வுக்கு வேண்டிய உதவிகளை வழங்கக் கூடிய சர்வதேச அமைப்பின் பொறுப்புமிக்க - கௌரவத்திற்குரிய மனிதரின் மனிதநேயப் பணியுடன் தொடர்புடைய விருப்பத்தை, மிகவும் அற்பத்தனமான, மூன்றாந்தர அரசியல் உள்நோக்கங்களுடன் கூடிய சுய நலத்திற்காக ஜனாதிபதி நிராகரித்தமையானது, அவர் மீது தமிழ் மக்களுக்கிருந்த 'கொஞ்சநஞ்ச' நம்பிக்கையையும் இல்லாமல் செய்து விட்டது.

இலங்கைக்கான தனது விஜயம் முழுக்க முழுக்க மனிதாபிமான ரீதியிலான் ஒன்றென்றும், இதில் அரசியல் உள்நோக்கம் எதுவுமில்லையெனவும் கொபி அனான் அவர்கள் வெளிப்படையாகவே ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்த போதிலும், இலங்கை அரசு அவரது வருகையை முழுக்கமுழுக்க அரசியல் நோக்கங்களுக்காக, மனிதாபிமானமற்ற வகையிலேயே பயன்படுத்தியுள்ளது என்றே கூறவேண்டும்.

தான் இலங்கையரசின் விருந்தாளியாகவே வருகை தந்ததாகத் தெரிவித்துள்ள கொபி அனான் - அந்த அரசு எடுக்கின்ற தீர்மானங்களுக்கமையவே தனது நிகழ்ச்சி நிரலைத் திட்டமிட வேண்டியிருந்ததாக வும் கூறியுள்ளமையானது ஒரு அர்த்தமற்ற நியாயப்படுத்தலாகவும், ஒருவிதமான சமாளிப்புத்தன்மை கொண்ட வார்த்தைகளாகவுமே உணரக்கூடியதாகவுள்ளது.

உண்மையில் அவர்கள் இலங்கையரசின் விருந்தாளியாக இங்கு நின்றாலும், அவரின் பயணம் மனிதாபிமான நோக்கத்தைக் கொண்டதாகவே இருந்து, வெறுமனே அரசு காட்டும் திசையில் செல்லும் ஒருவராகவே அவர் செயற்பட்டிருப்பாரேயானால் அவர் தனது நோக்கத்தைத் தவறவிட்டுவிட்டு ஒரு சுற்றுலாப் பயணியாக இங்கு வந்துபோயுள்ளார் என்றே எண்ணத் தோன்றுகிறது.

வடபகுதிக்கான பயணத்துக்கு அவருக்கான அனுமதி மறுக்கப்பட்டதன்மூலம், இலங்கையில் 'சுனாமி' பேரனர்த்தம் ஏற்படுத்திய மோசமான விளைவுகளால் பேரழிவைச் சந்தித்த மக்களின் அவலங்களைப் புரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை அரசு பறித்துக் கொண்டதுடன், தான் ஒரு பேரினவாதச் சிந்தனைக்கு அமையசெயற்படும் ஜனாதிபதியே என்பதை திருமதி சந்திரிகா குமாரதுங்கவும் மிகவும் அழுத்தமாக உணர்த்தியுள்ளார் என்பதே உண்மையாகும்.

ஜனாதிபதி இந்த விடயத்தை இப்படித்தான் கையாள்வார் என்பதை தமிழ்மக்கள் தமது கடந்தகாலப் பட்டறிவு அனுபவங்கள் மூலம் நன்றாக உணர்ந்திருந்தபோதிலும், சர்வதேச பொது அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரவலுமிக்க - நேர்மையான - செயலாளர் என்ற வகையில் அவர் தனது ஆளுமையைப் பயன்படுத்தி, தனது பயண நோக்கத்தை முழுமையாக நிறைவுசெய்யும் வகையில் வட பகுதிக்குக் கண்டிப்பாக வருகைதந்து தமது குறைகளைக் கேட்பாரென நம்பிய தமிழ்மக்கள் ஏமாந்து விட்டார்கள்.

ஜனாதிபதி தனது சுயத்தை இந்த விடயத்திலும் தெளிவாகவே வெளிப்படுத்திவிட்டார்.


மிகவும் முக்கியமானதும் மனிதாபிமான அடிப்படையிலானதுமான ஒரு விடயத்திலேயே... நாகரிகமற்ற அரசியல்வாதியாக நடந்துகொண்டு, பாரபட்ச அணுகுமுறையை மேற்கொண்ட ஜனாதிபதி, சமாதானம் தொடர்பான செயற்பாடுகளில் எத்தகைய நேர்மையற்ற மூலோபாயங்களைக் கையாள்வார் என்பதை விபரிக்க வேண்டியதே கிடையாது.

அரசின் இந்த கண்ணியத் தன்மையற்ற செயற்பாடும் ஏற்கனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணிகளை ஆயுதப்படைகளிடம் ஒப்படைத்த நோக்கமும், எதிர்கால சமாதான முயற்சிகளில் பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்றால் அது மிகையில்லை.

மனிதாபிமானப் பணிகளை - அரசியல் ரீதியிலும், இராணுவ ரீதியிலும், கையாள நினைத்துச் செயற்படும் ஓர் அரசுடன் அமைதிப் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வதென்பது ஆக்கபூர்வமான, நம்பிக்கையூட்டும் சாதகமான, பயன்களைத்தரும் என்று எவராலும் நம்பமுடியுமா?

அப்படி எவராவது நம்புவார்களேயானால் அவர்கள் பரிதாபத்திற்குரிய ஏமாளிகளாகவே இருக்கமுடியும்.

# நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# அரச ஊடகத்தின் அனர்த்தம்

ஊர் சுற்றியாரை இரண்டு மூன்று நாட்களாய்க் காணவில்லை. சுனாமி அலை அடிச்சுக் கொண்டுபோய் விட்டுதோ? என்று கேட்டுக் கொண்டே நண்பன் எனது அறைக்குள் நுழைந்தான்.

அலை அடிச்சு ஓய்ஞ்சபின் உன்னைச் சந்தித்து நான் பேசியிருக்கிறேன். சுனாமி அலையைத் தொடர்ந்து நமது பகுதிகளில் நடந்த சில கூத்துக்களையும் எழுதி மக்களின் கவனத்துக்குக் கொண்டுவந்திருக்கிறேன். இவ்வளவு நாள் கழிந்த பின், சுனாமி அலை என்னைக் கொண்டு போய்விட்டதோ! என்று காலம் கடந்து புதினம் என்ற பெயரில் வதந்தியை அவிழ்த்து விடுகிறீரே என்று நண்பனுக்குக் கொஞ்சம் காட்டமாகவே சொன்னேன்.

வதந்தியை நான் பரப்பவில்லையப்பா. இந்த மாதிரி வதந்திகளைப் பரப்புவதற்கென்றே அதிகார பூர்வமான சில ஊடகங்களை அரசும் அதற்கு ஆதரவான பேரினவாத, சிங்கள பௌத்த மேலாண்மைவாதிகளும் வளர்த்துப் பராமரிக்க இருக்கவே இருக்கின்றன. அந்த ஊடகங்கள் விடும் 'கரடி' களோடு யாரோ அவிழ்த்து விட்டதைத்தான் நான் சொன்னேன் என்றான் நண்பன்.

கடந்த சனிக்கிழமை நண்பகல் நண்பர் வேலணை - வீரசிங்கத்தைச் சந்திப்பதற்காக கொழும்பில் கிட்டங்கித் தெருவை நோககிப் போய்க்கொண்டிருந்தேன். செட்டித்தெருவில் சற்றுத் தூரத்தில் எதிர்த்திசையில் நின்ற நண்பரொருவர் வீதியைக் கடந்து என்னிடம் வந்தார்.

நீண்ட நாட்களுக்குப் பின் சந்தித்தபோதும் எனது கையைப் பிடித்து வீதியின் ஓரத்துக்கு அழைத்துச் சென்ற அவர, உங்களைக் கேட்டால் தான் உண்மை தெரியும் என்றார்.

'என்ன உண்மை, எதைப்பற்றிச் சொல்லுகிறீர்கள்? என்று நான் கேட்டேன்.

காலையில் இலங்கைவானொலி சொன்ன செய்திதான் சுனாமி அலையில்... என்றார்.

இலங்கை ரேடியோ செய்திகளை நான் கேட்பதில்லை. கேட்டாலும் அதில் தெரிவிக்கப்படும் எதையும் நான் நமபுவதில்லை. 'லங்காபுவத்'தில் இதுவும் ஒன்று இதுமட்டுமல்ல கொழும்பிலிருந்து வெளிவரும் சில ஆங்கிலத் தினசரிகளின் 'அவுட்டாக்களையும் நான் நம்புவதில்லை' என்றேன்.

ரேடியோவில் சொன்ன செய்தி தவறாக இருக்குமா? என்று மீண்டும் அவர் சொன்னார்.

இந்த ரேடியோ மட்டுமல்ல உங்கள் ( அவர் ஒரு இந்தியன்) இந்தியரேடியோவும் முன்பு இந்திய அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவம் இங்கு இருந்த போது மிகப்பெரிய 'கரடி' விட்டதை மறந்து விட்டீர்களா? என்றேன்.

அவருக்குச் சிரிப்பு வந்து விட்டது. தங்களுக்குத் தேவையானவற்றை, தங்களது ஆசையை வெளியிட்டு மக்களைத் திசைதிருப்பிக் குழப்பத்தில் ஆழ்த்துவதற்கு இலங்கையும் சரி, இந்தியாவும் சரி என்ன செய்ய வேண்டுமோ செய்து கொள்ளத்தவறுவதில்லை. இதில் இருதரப்பும் சில சமயங்களில் கூட்டுச் சேர்ந்தும் குழப்பிவிடுவினம்.

பின்னர் நான் நண்பன் வீரசிங்கத்திடம் போனேன். அங்கே வந்த நண்பர் கம்பளை தாசனும் இதே வதந்திதான் இன்று புறக்கோட்டையில் முக்கிய பேச்சு என்றார். அரச வானொலியின் அனர்த்தம் இது. பொறுப்பு வாய்ந்த ஒரு அரச ஊடகம் இலங்கையில் ஓர் இனத்தின் மதிப்புக்கும், மரியாதைக்கும், பக்திக்கும், பாசத்திற்கும் உரியவரகள் பற்றிய ஒரு செய்தியை வெளியிடும் போது,எவ்வளவு பொறுப்புடன் துருவித்துருவி ஆராய்ந்து சரியான ஆதாரங்களைப் பெற வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வு வேண்டாமா? ஒரு அரசுத்துறைக்கு அக்கறை கொஞ்சம்கூட இல்லையென்றால் அரசின் நிர்வாகத்தைப் பற்றி என்ன சொல்வது? நம்பிக்கையான ஒரு செய்தியைப் பெறக் கூடிய நிலையில் இந்த அரச ஊடகம் செயல்படுகிறதா? இந்தச் செய்தியை, செய்தியின் நம்பகத்தை உறுதிப்படுத்துவதற்கும் கூட இந்த ஊடகத்தினால் முடியவில்லை!

போகட்டும் இந்தச் செய்தி ஒலிபரப்பான பின்னர் அது முற்றும் தவறானதென்பது உறுதியான பின் நாகரீகமான ஒரு அரசாக இருந்தால் அந்தச் செய்திக்காக மக்களிடமும் வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கோரியிருக்க வேண்டாமா?

இந்தச் செய்திக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டப்பட்ட முப்படைகளின் தளபதியும், கடற்படையின் தளபதியுமான தயாசந்தகிரியே மக்களிடம் மன்னிப்புக் கோரி அரசின் நாகரீகத்தையும், பண்பையும் காட்டியிருக்க வேண்டுமல்லவா?

சுனாமி மக்களுக்கிடையில் எந்தவித பேதமுமில்லாமல் எல்லோருக்குமே பாடம் படிப்பித்துச் சென்றதாக, நாட்டின் தலைவியும் சொன்னார். மற்றும் பல அரசியல் வாதிகளும், ஆன்மீகவாதிகளும், நாட்டின் தேசிய ஒருமைப் பாட்டைத் தூக்கிப்பிடிக்கும் ஊடகங்களும் கூட கொட்டி முழங்கின.

ஆனால் செயலில் எல்லாமே எதிர்மாறாகத்தான் நடந்து கொண்டிருக்கின்றன. எல்லோருமே எதிர்மாறாகத்தான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டுப் பல்லாயிரம் பேர் பலி எடுக்கப்பட கணப்பொழுதில் சின்னஞ்சிறுசுகள் முதல், பெருசுகள் வரை எதுவுமில்லாது நிர்க்கதியாக விடப்பட்ட சமயத்தில் உடனடியாகச் சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியவர்கள் விடுதலைப்புலிப் போராளிகளே

இன, மத, மொழி, பிரதேச வேறுபாடின்றி விரைந்து சென்று உதவும்படி தமது போராளிகளுக்கு உத்தரவிட்டவர் தலைவர் பிரபாகரனே.

இதன் பின்னர் வெளியூர்களிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும் கிடைக்கும் நிவாரணப் பொருட்களை ஊழல் மோசடிகள் இல்லாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கும் பணியிலும் இந்தப் போராளிகளே ஈடுபட்டு வந்தனர்.

விடுதலைப்புலிப் போராளிகள் ஒழுங்கு, கட்டுப்பாடுடன் சீரான முறையில் நிவாரண உதவிகளை சகல மக்களுக்கும் கிடைக்கச் செய்வதில் ஆற்றும் பணிகளை வெளிநாட்டு ஊடகப் பிரதிநிதிகளும், வெளிநாட்டுப் பிரமுகர்களும் பாராட்டி வருகின்றனர்.

எதுவுமே உருப்படியாகச் செய்யும் அறிவும், ஆற்றலுமில்லாதவர்கள் அறிக்கைகள் விடுவதில் மட்டுமே வல்லவர்களாயிருந்து என்ன பயன்?

பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவர்கள் புனர்வாழ்வு பெறுவதற்கு யார் எதைச் செய்தாலும் வரவேற்பது தான் முறை. ஆனால், தங்களால் செய்ய முடியாததை மற்றவர்கள் செய்வது பிடிக்காதவர்களும் நம்மிடையே உள்ளனர்.

இதனால்தான் மக்கள் நலன்புரி நிலையங்களில் நிவாரண உதவிகளைப் பங்கிட்டு வழங்கும் பொறுப்பை ஜனாதிபதி சந்திரிகா ஆயுதப் படையினரிடம் ஒப்படைத்துள்ளார். அதுவும் தமிழ்ப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நிவாரணப் பொருட்ளைப் பங்கிட்டு வழங்கும் பொறுப்பை தமிழ் தெரியாத சிங்களப்படையினரிடம் ஒப்படைத்துள்ளார்.

புனர்வாழ்வுக் கழகமும் ,புலிகளும் இந்தப் பணிகளைச் செய்யக் கூடாதாம். அனர்த்தம் விளைந்த மறுகணமே உதவிக்குச் சென்று புலிகள் உதவியபோது, படையினர் தம்மைப் பாதுகாப்பதிலும் தமது தேவைகளையும் பற்றியே சிநதித்தனர்.

இன்று புலிகள் இந்தப் பணிகளைச் செய்து வந்தால் மக்கள் மத்தியிலிருந்து தாம் ஓரங்கட்டப்பட்டுவிடுவோம் என்று இன்று சிந்திப்பவர்கள் அப்போது என்ன செய்தார்கள்.

எத்தனை சுனாமிகள் இலங்கையில் வந்தாலும் இங்குள்ளவர்களைத் திருத்தவே முடியாது.

எந்தப் பிரளையம் வந்தாலும் அடுத்த தேர்தலைப் பற்றியும் அடுத்து என்ன பதவியைத் தேடுவதென்ற கவலையும் எமது தமிழர்களுள்ளும் குடிகொண்டிருக்கும் வரை தமிழனுக்கு சுயநிர்ணய உரிமை, சுதந்திரம், பாதுகாப்பு என்பதெல்லாம் கடினமாகவே தானிருக்கும்.

என் நண்பன் ஊடகப் புரட்டுக்கள் பற்றிச் சொன்னது இது .

நல்ல கிடாய் ஆடு தலை நிமிர்த்தி சிங்கம் போல வீதியில் நடந்து சென்று கொண்டிருந்த. அதன் பின்னே ஒரு குள்ளநரி கிடாயின் கவட்டுக்கிடையில் தொங்கியபடி ஆடிக் கொண்டிருப்பது எப்போதுவிழும் அதைத்தாங்கிப் பிடித்து எடுத்துக் கொள்ளலாம் என்று தொடர்ந்து நடந்து கொண்டே இருந்ததாம்.

பகுதி - V - சங்கர் -



# காற்றே நீ எம் கதை கேளாயோ...!
# அலையே நீ எம் நிலை உணராயோ...!

சின்ன உல்லையில் இருந்த சிறுவர்களைச் சந்தித்தேன் - அவர்களில் ஒருவருடனான உரையாடல் இது- "எந்தப் பள்ளிக் கூடத்தில் படிக்கின்றீர்கள்?" "அல் சுக்ஸா" "எத்தனையாம் வகுப்பு?" "ஆண்டு பத்து" பெயர் றபீக். இந்தச் சம்பவத்தில உங்கடை குடும்பத்தில்...? ஓ எங்கட ராத்தா மூணு பேர். "அவங்கடை பேர்?" "ஒண்டு ஸர்னா, மற்றது "அமாலியா", "காமிலா" "நீங்கள் எப்பிடித்தப்பினீர்கள்? "நான் மீன் வாங்கப் போனதால தப்பினம், "உங்கட உம்மா வாப்பா?..." "அவங்களும் தப்பிட்டாங்க உம்மா மரத்தில ஏறீட்டா" "உம்மா மரத்தில ஏறினவா...? "இல்லை... தண்ணி முப்பதடிக்கு மேல வந்தது தான்- தண்ணி மேல கொண்டு போக மரத்தப் புடிச்சுக்கிட்டா" இப்ப எங்க இருக்கின்றீர்கள்" எங்கட காக்கா வீட்டில. அவருக்கும் கஷ்டம்தான்" "சின்ன உல்லையில் எத்தனை பேர் மௌத்தாயிட்டாங்க?" "கணக்கெடுக்கல்ல... இப்பவும் மையத்து எடுக்கிறாங்க... நம்மட ராத்தா ஸர்னா மைத்தும் எடுக்கல" "அவவுக்கு எத்தன வயசு? "முப்பத்திரண்டு" மத்தவக்கு பத்தொம்பது மத்தவக்கு பதினெட்டு.

அங்கிருந்து கோமாரி நோக்கித் திரும்பி வருகையில், அங்கே உடைந்த வீடுகள் சிலவற்றில் சிலர் தங்கி சமைத்துக் கொண்டிருக்கின்றனர். மிகவும் ஆபத்தான நிலைமை இது. இன்னும் சுத்தம் செய்யாமலிருக்கும் இடங்களிவை. நோய்கள் உற்பத்தியாகக் கூடிய இடங்கள் என்ற வகையில் இது தவிர்க்கப்பட வேண்டிய நிலைமை.

ஜே.வி.பி உறுப்பினர்கள் அங்கு வந்து திரும்பியதை முதல்நாள் கண்டிருந்தேன். எனவே அதுபற்றி அங்கிருந்த ஒருவருடன் உரையாடினேன்."ஜே.வி.பி காறங்கள் வந்தாங்களே... சனத்துக்கு ஏதும்குடுத்தாங்களா? " "சனத்துக்கு ஒண்டும் குடுக்கல அவய... சும்மா பாத்திட்டு போறாங்க... நாங்க டென்ட் அடிச்ச இடத்தில இருக்கம்" "ஆர் டென்ட் அடிச்சது?" ரி.ஆர்.ஓ... அது வேற அங்க கேம்புக்கு மேல தண்ணிக்கு அங்கால கொஞ்சம் சனம் கிடக்காம். அங்க நாளைக்கு டென்ட் அடிச்சுக் குடுக்க வேணும்" "அந்த இடத்துக்கு என்ன பேர்?"

"கட்டு மடு" " இங்க எத்தின பிரேதம் எடுத்தாங்கள்?" "அறுபது இருக்கும். தண்ணிக்க இன்னும் கிடக்கு. தூக்கேலாது பிஞ்சு வருகுது. சிலதைத் தூக்கிப் பத்த வச்சிருக்கம்"

"உங்கட குடும்பத்தில ஆராவது?" ' ஓ... தங்கச்சி ஒண்டு "அவவுக்கு என்னபேர்?" "இந்து மதி" " அவவுக்கு எத்தின வயசு?"... "இருபது வயசு... கலியாணம் முடிச்சிட்டா"

"இந்தப் பக்கம் ஆர் நிண்டு பிரேதம் தூக்கி எடுத்தது?" "சனம்தான். இயக்கமும் கூடுதலாக நின்று பாடுபட்டது?"

☆☆☆

திருக்கோயில் பிரதேசத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு சிறிய சிறிய கட்டுகளாகக் கொண்டு வந்த ஐநூறு கட்டு விறகுகளில் சுமார் நூற்று ஐம்பதை காஞ்சிரங்குடா முகாம் விசேட அதிரடிப்படையினர் பலவந்தமாகப் பறித்தெடுத்ததாக அவற்றை ஏற்றி வைத்தோர் ஆத்திரத்துடன் கூறினர்.

இதேவேளை உணவுப் பொருட்களைக் கொண்டு வந்த பெண் போராளிகளைச் சாகாமம் முகாம் விசேட அதிரடிப்படையினர் தடுத்து நிறுத்தி, பிரச்சினைப்பட்டதைப் பெண் போராளிகள் கூறினர் - நீண்ட நேரப் பிரச்சினைக்குப் பிறகே பெண் போராளிகளை அவர்கள் அனுமதித்தனர். இதற்குக் காரணம் அவர்கள் இடுப்புப்பட்டி அணிந்திருந்ததுதான் எனக் கூறினர்.

இது தொடர்பாக அங்கு நின்ற அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்மநாதனைக் கேட்டேன். "அதெப்படி மறிக்க முடியும்" என என்னைக் கேட்டார். இதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர்தான் திருமலையில் பெண் போராளிகளுக்கு இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கைகொடுக்கும் படம் பத்திரிகைகளில் வெளியாகியிருந்தது. "சந்திரிகா நோனா- பெண் போராளிகளுக்குக் கைகுடுக்கேக்கை பெல்ட் கழட்டிப் போட்டு வந்தாத்தான் கை தருவன் எண்டு சொன்னவவோ? அப்படிச் சொல்லியிருந்தால் அவவுக்கு முன்னால் நின்று பெல்ட் கழட்டுவினமோ? கை குடுப்பினமோ? முப்படைத் தளபதியே பெல்ட்டோட நிக்கிற பெண் போராளிகளுக்குக் கைகுடுக்கேக்கை, நீங்கள் ஏன் பிரச்சினைப் படுத்துகிறீர்கள்? எண்டு எம்.பி.எண்ட முறையில் கேக்கலாம்தானே?" என்று கேட்டேன். ஓம்ஓம்... என்று ஆமோதித்தார் அவர்.

ஆனாலும் நிவாரணப் பணிகள் தொடர்பாகப் போராளிகளுடன் முரண்பாடும், படையினரின் போக்குத் தொடரவே செய்தது. 04.01.2005 அன்று ரீ.ஆர்.ஓ. நிறுவனத்தின் நிவாரண உதவியாகச் சென்ற உணவுப் பொருட்கள் தொடர்பாகப் பெரும் பிரச்சினை ஏற்பட்டது. திருக்கோயில் பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மூன்று உழவு இயந்திரங்களை வழிமறித்து, ரீ.ஆர்.ஓவின் நிவாரண உதவியைப் புலிகள் மறித்து எடுப்பதாக தர்க்கத்து பிரச்சினையெழுப்பினர்.

வன்னியில், யாழ்ப்பாணத்தில் ரீ.ஆர்.ஓ. என்றால் யார் என்பது தெரியும். மட்டக்களப்பிலும், திருமலையிலும் அவ்வாறே. இது பற்றி விசேட அதிரடிப்படையினருக்கும் நன்கு தெரியும். தெரிந்தாலும், ஒரு குழப்பத்தை ஏற்படுத்தவே இவ்வாறு முயன்றனர்.

புலிகள் கடத்தும் உணவுப் பொருட்களை மக்களுக்கு விநியோகிக்கத் தாம் நடவடிக்கை எடுத்ததாக நாடகமாடினர். பல வந்தமாக அவற்றை முகாம்களில் பறித்துத் தாமே விநியோகித்தனர். இந்த நிலையில் தமிழீழ விளையாட்டுத் துறையைச் சேர்ந்த போராளி கவியாழன் துப்பாக்கி முனையில் தடுத்து நிறுத்தப்பட்டார். 'சுடுவேன்' என மிரட்டினார் ஒரு சிப்பாய்" ஏலுமெண்டாச் சுடடா, நீயும் ஒரு படை, நானும் ஒரு படை சுடுறதெண்டாச் சுடு" என முன்னே நின்றார் கவியாழன், கவச வாகனங்கள் சகிதம் நின்றே இந்த அட்டகாசத்தைப் புரிந்தனர் படையினர்.

இதைப்போலவே பெண் போராளிகளை மறித்த படையினர் பொருட்களை இறக்க முற்பட்டபோது பிரச்சினை எழுந்தது.

கவச வாகனத்தில் இருந்த துப்பாக்கியை - இவர்களை நோக்கித் திருப்பியபோது "இஞ்சைபாரடி, இங்கே கொழுவேல்ல.. சுடப் போறாராம்" என்று ஒரு பெண் போராளி மற்றவருக்குச் சுட்டிக்காட்டினார். கூட இருந்த மக்கள் கொல்லென்று சிரித்தனர். மக்களும் சேர்ந்து தம்மை கேலி செய்வதைக் கண்ட அவர்கள் - ஆத்திரத்தில் பெண் போராளி செஞ்சுடரை பச்சை மட்டையால் தாக்கினர். அங்கே பெரும் களேபரம் ஏற்பட்டது. அங்கிருந்த பெணகள் இப்பெண் போராளிகளை அழைத்துச் சென்று பாடசாலையில் ஒரு அறையில் தங்கவைத்தனர்.

பச்சை மட்டை வீரர்கள் தாம் நினைத்ததைச் சாதித்த திருப்தியில் திரும்பினர். இந்த விவகாரம் போராளிகளிடையே கடும் சினத்தை ஏற்படுத்தியது.

ஒரு கட்டத்தில் தமிழீழ அரசியற்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி "கெதியா தமிழீழத்தைக் கண்டிட்டா இந்த மாதிரிப் பிரச்சினையெல்லாம் வராது" என்று சொல்லி சலித்துக் கொள்ளுமளவுக்கு நிலைமை இருந்தது. இந்த நிலையிலும் சிறப்புத் தளபதி கேணல் பானு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் இது



கௌசல்யன்

தொடர்பாக முறைப்பாடு செய்யுமாறும், படை உயரதிகாரிகளுடன் கதைக்குமாறும் கூறினார்.

☆☆☆

05.01.2005 அன்று இந்தவிடயம் தொடர்பாக அக்கரைப்பற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் ஒரு சந்திப்பு நடைபெற்றது. இனி இவ்வாறான சம்பவங்கள் நடைபெறக்கூடாதென விடுதலைப் புலிகள் தரப்பில் கலந்து கொண்ட மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பன், மனோஜ் ஆகியோர் படையினரிடம் வலியுறுத்தினர்.

படையினர் இனி இவ்வாறு நடந்து கொள்வதில்லை எனக் கூறுவதும், மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவதும் தொடர் கதைதான். ஆனால், இந்த முறை அவ்வாறான உறுதிமொழிகளைத் தரவில்லை என கௌசல்யன் என்னிடம் தெரிவித்தார்.

அரசியலில் அரசால் உத்தரவிடப்படும் பணிகளை நிறைவேற்றுபவர்களாகவே படையினர் இருக்க வேண்டும். ஆனால், நிர்வாகத்திலும், அரசியலிலும் தாங்கள் தீர்மானிக்கும் ஒரு சக்தி என்பதை நிரூபிக்கும் விதமாகவே படையினர் நடந்து கொள்கின்றனர். உதாரணத்துககுத் தேசியத் தலைவரின் பொன்மொழிகளை இடத்துக்கு ஏற்றவாறு தெரிவுசெய்து, சொறித்து வைத்திருக்கும் வழக்கம் எம்மிடமுண்டு. மக்கள் பாணி தொடர்பாக, நிர்வாகம் தொடர்பாக, மாவீரர் தொடர்பாக, புலனாய்வு தொடர்பாக... இவ்வாறு வெவ்வேறு பொன் மொழிகளை அந்தந்த பணிமனைகளில் குறிப்பிடுவதுமுண்டு.

அதே பாணியைப் பின்பற்றி, அதிரடிப் படையினரும் தமது முகாம்களுக்கு முன்னால் அதிரடிப் படையின் பொறுப்பாதிகாரி உபுல் செனவிரத்னவின் கூற்றை முகாமின் வெளியில் பொறித்து வைத்துள்ளனர். முகாமின் உள்ளே பொறிப்பதென்பது அவர்களின் கட்டுமானத் தேவைக்காக இருக்கலாம். இவைகள் தான் வீதிகளை வழி மறித்தும் சக்தி என்பதை பொது மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதே அவர்களின் நோக்கம்.

"விருப்பால் அல்லது வெறுப்பால, அச்சத்தால் அல்லது குழப்பத்தால், நற்பண்பையும், நேர்மையையும் புறக்கணிப்பாயேயானால், அவரின் புகழ் தேய்பிறை போல் மங்கி மறையும்". (தொடரும்...)



# உங்களுக்கு புத்தாண்டு யோகம் எப்படி?

## மகரம்

மகரராசி அன்பர்களே நீங்கள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்கியிருப்பீர்கள். நீங்கள் யாரையும் அசட்டை செய்யமாட்டீர்கள். இந்த ஆண்டு சனி மற்றும் குருவின் பக்கபலத்தோடு தொடங்குகிறது. சனி தற்போது வக்கிர நிலையில் இருந்தாலும், மார்ச் மாதம் வக்கிர நிவர்த்தி அடைந்துவிடுவார். சனியால் பல்வேறு வகையில் பொருளாதார முன்னேற்றத்தைக் கண்டிருக்கலாம். குருபகவான் 9 ஆம் இடத்தில் நின்று சுபங்களைத் தந்திருப்பார். மேலும் காரிய அனுகூலமும் கிடைத்திருக்கும். குருவின் 9 ஆம் இடத்துப் பார்வையும் சிறப்பாக அமைந்துள்ளதால், செல்வாக்குப் பெற்றிருப்பீர்கள். நிழல் கிரகங்களான ராகு-கேது சாதகமற்ற இடங்களில்தான் உள்ளனர். ராகுவால் இடப்பெயர்ச்சி அலைச்சல் நிகழ்ந்திருக்கலாம். கேது 10 ஆம் இடத்தில் நின்று உடல் உபாதைகளைத் தந்திருக்கலாம். ராகு, கேதுவின் கெடுபலனை முறியடித்து சனியும், குருவும் உங்களுக்குத் தரும் நன்மையே மேலோங்கி நிற்கும்.

இந்த ஆண்டு அனைத்து முக்கிய கிரகங்களும் பெயர்ச்சி அடைகின்றன. பெப்ரவரி 28 ஆம் திகதி ராகு - கேது பெயர்ச்சி அடைகிறார்கள். அப்போது ராகு 3 ஆம் இடத்துக்கு வருவது மிகவும் சிறப்பானது. அவர் முயற்சி அனைத்துக்கும் அனுகூலத்தைக் கொடுப்பார். அதேநேரம் கேது 10 இலிருந்து 9 ஆம் இடத்துக்குச் செல்கிறார். இது சாதகமான இடம் அல்ல என்பதால் அவர் சிற்சில பின்னடைவுகளைக் கொடுப்பார். ஜூன் 27 ஆம் திகதி சனி பகவான் 7 ஆம் இடத்துக்குச் செல்வது அவ்வளவு நல்லதல்ல. அவர் குடும்பத்தில் பிரச்சினையை உருவாக்கலாம். குருபகவான் 9 ஆம் இடத்தில் இருந்து செப்ரெம்பர் மாதம் 14 ஆம் திகதி 10 ஆம் இடத்துக்கு வருகிறார். அது சிறப்பான இடம் அலல. பொருள் இழப்பு ஏற்படலாம். குரு சாதகமற்ற இடத்துக்குச் சென்றாலும், அவரது 5 ஆம் இடத்துப் பார்வை சிறப்பாக அமையும் என்பதால் அதன் மூலம் எந்த இடையூறையும் முறியடித்து வெற்றி காணலாம்.

மேற்கண்ட நிலையில் இருந்து பார்த்தால், ஆண்டின் தொடக்கத்தில் சனி, குருவும் பிற்பகுதியில் ராகுவும் நன்மை தருவார்கள். அந்த வகையில் விரிவான பலனைக் காணலாம்.

எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். பணப்புழக்கம் தொடர்ந்து இருக்கும். தேவைகள் பூர்த்தியாகும். ஆண்டின் இறுதியில் வீண் செலவுகள் உருவாகலாம். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. மதிப்பு, மரியாதை சிறப்பாக இருக்கும். புதுமனை, நிலம் வாங்க நினைப்பவர்களின் எண்ணம் கைகூடும். வாகன சுகம் கிடைக்கும்.

**குடும்பம்:** சிறப்படையும். கணவன் - மனைவி இடையே அன்பு பெருகும். சுப நிகழ்ச்சிகள் நடக்கும். திருமணம் கைகூடிவரும். பெண்கள் உதவிகரமாக இருப்பர். ஜுலை மாதத்துக்குப்பிறகு குடும்பத்தில் சிற்சில மனக்கசப்புகள் வரலாம். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துப் போகவும். செப்ரெம்பர் மாத்துக்குப் பிறகு சுபநிகழ்ச்சிகள் தள்ளிப் போகலாம்.

**உத்தியோகம்:** நல்ல முன்னேற்றத்தைக் காணலாம். வேலையில் திருப்தியிருக்கும். பதவி உயர்வு கிடைக்கப் பெறுவீர்கள். மேல் அதிகாரிகள் அனுசரணையாக இருப்பர். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். சிலர் வெளியூர், வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். கோரிக்கைகள் நிறைவேறும். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு வேலைப் பளு அதிகரிக்கும். வேலையில் ஒருவித மந்தநிலை ஏற்படும். மேல் அதிகாரிகளின் அனுசரணை கிடைக்காமல் போகலாம். சிலர் தங்கள் வசமுள்ள பொறுப்பை இழக்க வேண்டிய நிலை ஏற்படலாம். பொறுமையும், உழைப்பும் தேவை. உங்கள் வேலையை நீங்களே செய்வது நல்லது. சிலர் கொடுக்கப்பட்ட பதவியை இழக்க நேரிடலாம். இடமாற்றம் காரணமாகக் குடும்பத்தை விட்டுப்பிரிய நேரிடலாம்.

**வியாபாரம்:** வியாபாரம் மிகச் சிறப்பாக நடைபெறும். குறிப்பாக மார்ச் முதல் செப்ரெம்பர் வரை உன்னத பலனைக் காணலாம். புதிய தொழில் தொடங்குபவர்கள். இந்தக் காலகட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும். ராகு சிறப்பாக இல்லாததால், உங்கள் முயற்சியில் சிற்சில தடைகளைக் கடக்க வேண்டியிருக்கும். எது எப்படியானாலும் உங்களின் தீவிர உழைப்பால் போதிய வருமானம் காணலாம். ஜூன் மாதத்துக்குப் பிறகு சிலர் தீயோர் சேர்க்கையால் பணத்தை விரயமாக்கலாம். எனவே யாரிடமும் பார்த்துப் பழகவும். யாரை நம்பியும் பணத்தை ஒப்படைக்கவேண்டாம். வேலையின்றி இருப்பவர்கள் குறைந்த முதலீட்டில் தொழில் தொடங்கலாம்.

சீரான முன்னேற்றம் கிடைக்கும். புதிய ஒப்பந்தம் கிடைக்கப் பெறுவர். மதிப்பு, பாராட்டு வந்துசேரும். சிலருக்கு அரசிடமிருந்து விருது, பட்டம் கிடைக்கும். பொதுநல சேவகர்கள் நல்ல வளத்தைக் காண்பர். புதிய பதவி வரலாம். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு சிரத்தை எடுத்தே முன்னேற வேண்டியிருக்கும். புதிய ஒப்பந்தங்கள் அவ்வளவு எளிதாகக் கிடைக்காது. உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காமல் போகலாம். அரசியல்வாதிகள் ஆண்டு இறுதியில், பதவியை எதிர்பாராமல் இழக்க வேண்டியிருக்கும்.

மாணவர்கள் சிறப்பான நிலையில் தேர்ச்சி பெற வாய்ப்புண்டு. நல்ல மதிப்பெண்களும் கிடைக்கும். விரும்பிய பாடத்தைக கற்கலாம். அடுத்த கலவி ஆண்டு இதே நிலையில் இருக்காது. அதிக சிரத்தை எடுத்துப் படிக்க வேண்டியிருக்கும். சிலர் கெட்ட மாணவர்களோடு சேர்ந்து படிப்பைச் சீரழிக்கலாம். யாரிடமும் பார்த்துப் பழகவும். உங்கள் முயற்சிக்குத் தகுந்த பலன்கள் கிடைக்காமல் போகாது.

விவசாயிகள் ஆண்டின் தொடக்கத்தில் சிறப்பான நிலையில் இருப்பர். நெல், கரும்பு, பழ வகைகள், சோளம் போன்றவற்றின் மூலம் நல்ல வசூல் கிடைக்கும். புதிய சொத்து வாங்கத் தடைகள் வரலாம். அக்கம பக்கத்து விவசாயிகளிடம் இருந்துவந்த சச்சரவுகள் மறையும். கூலி வேலை செய்பவர்கள் மன நிம்மதியுடன் காணப்படுவர். ஆண்டு இறுதியில் மானாவாரி பயிரில் நல்ல வருமானம் கிடைக்கும். சேமிப்பு எதிர்பார்த்தளவு இருக்காது.

பெண்கள் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலநது கொள்ளும் வாய்ப்புக் கிடைக்கும். கணவன் மற்றும் குழந்தைகளுடன் புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவீர்கள். செப்ரெம்பர் மாதத்துக்குப் பிறகு குடும்பத்தினருடன் விட்டுக்கொடுத்துப் போகவும்.

வழக்கு விவகாரங்கள் சிறப்பாக இருக்கும். தீர்ப்பு சாதகமாக வரும். என்றோ கைவிட்டுப் போனவை மீண்டும் கிடைக்கும். ஆண்டின் இறுதியில் வழக்குத் தள்ளிப் போகலாம். எனவே புதிய வழக்குகள் எதிலும் சிக்கவேண்டாம்.

உடல்நலம் சிறப்படையும். பித்தம், மயக்கம், உஷ்ணம் தொடர்பான உபாதைகளால் அவதிப்பட்டு வந்தவர்கள், அதிலிருந்து பூரண குணம் பெறுவீர்கள். விபத்துப் பயம் அடியோடு மறையும். வெகு நாட்களாக வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்கள் வீடு திரும்புவர். தாயின் உடல்நலம் மேம்படும்.

**பரிகாரம்:** கேது ஆண்டு முழுவதும் சாதகமற்ற நிலையில் இருக்கிறார். எனவே துர்க்கை வழிபாடு நடத்துங்கள். பாம்புப் புற்றுள்ள கோயிலுக்குச் சென்று பால் ஊற்றுங்கள். பெரும்பாலான கிரகங்கள் நன்மைதரும் நிலையில் இருப்பதால், ஏழைகளுக்கு இயன்ற உதவியைச் செய்தால், நன்மைகள் அதிகரித்து மகிழ்ச்சி கூடும். உங்களுக்கு வரும் செல்வம் நிலைத்து நிற்கும். ஜூன் மாத்துக்குப்பிறகு சனி பகவானுக்கும், செப்ரெம்பருக்குப் பிறகு தட்சிணாமூர்த்திக்கும் அர்ச்சனை செய்யுங்கள். ★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# கல்வியியற் கல்லூரி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்காக விண்ணப்பித்தோரில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட - யாழ், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களின் விபரத்தின் நேற்றைய தொடர்ச்சி.

## விசேட கல்வி (...நேற்றைய தொடர்ச்சி)

சின்னையா வசந்தி (மானிப்பாய்), தர்மரட்ணம் ரஜினிகாந் (கரணவாய் தெற்கு), சிவஞானவேல் மதுசூதனன் (வல்வெட்டித்துறை), பாலசுந்தரம் நிசாந்தன் (சாஸ்திரிகூழான்குளம்), கஸ்தூரி கார்த்திகேசு (பூநகரி), சேனாதிராசா ஜகிந்தன் (கொட்டடி), இராசநாயகம் சுமணன் (நாவற்குழி), இராமச்சந்திரன் ஜெயமோகன் (அல்வாய்), இயாவு சாந்தீஸ்வரன் (நெழுக்குளம்), பேரின்பம் லியோனிற் கிருபாகரன் (சுதுமலை), ஜெயப்பிரியா ஸ்ரீஸ்கந்தராஜா (யாழ்ப்பாணம்), பேரம்பலம் தனுசன் (உருத்திரபுரம்), பாலசிங்கம் சிறிரமணன் (புதுக்குடியிருப்பு), நாகமுத்து சுதாகரன் (கோணாவில்), நடராஜா சுஜீவன் (கோண்டாவில் கிழக்கு), கந்தசாமி இராஜேந்திரன் (வவுனியா), சண்முகவடிவேல் ராதிகா (அராலி மத்தி), நடராஜா நிசாந்தினி (மட்டுவில் தெற்கு), இராஜரத்தினம் திலீபன் (சுன்னாகம் மேற்கு), நடேசன் சிவரூபன் (தெல்லிப்பளை கிழக்கு), ஜேசுதாசன் பவளமலர் (வெளிக்குளம்),

இராசையா தயாளினி (கரவெட்டி மத்தி.), தனலட்சுமி பாலசுப்பிரமணியம் (பொலிகண்டி), கிருபாராசா பிரதீபா (அரியாலை), சிவசுப்பிரமணிய குரு சிவஜெயந்தி (கணேசபுரம்), சோமபாலன் அஜித்தன் (முள்ளியவளை), மியதாஸ் மறோமக்ஸன் (யாழ்ப்பாணம்),

## கணிதம் (தமிழ்)

சிறிபவன் கோபிகிருஸ்ணா (அளவெட்டி தெற்கு), சிவகுமார் (அளவெட்டி தெற்கு), விஜயரத்தினம் நிர்மலேஸ்வரன் (அத்தியடி), சிவலிங்கம் குருபரன் (திருநெல்வேலி தெற்கு), முத்துத்தம்பி சுதாகரன் (நவாலி தெற்கு), கந்தசாமி மோகன் (சாவகச்சேரி), நடராஜா குகராஜன் (காரைநகர்), கிருஸ்ணன் பிரபாங்கனி (மட்டுவில் தெற்கு), சீவரத்தினம் சிவசுதன் (சுன்னாகம்), சுந்தரமூர்த்தி சுரேந்திரன் (கரணவாய் தெற்கு), ஆறுமுகம் யோகலிங்கம் (திருநெல்வேலி), கந்தசாமி விமலநாதன் (நாவற்குழி), தயாபரன் யசோதரன் (ஊர்காவற்துறை), சிவபாதசுந்தரம் கெங்கா (அச்சுவேலி), இராசையா தெய்வேந்திரன் கிருபானந்தம் (தழ்பசிட்டி), வல்லிபுரம் ஐங்கரன் (கொடிகாமம்), பாலகிருஸ்ணன் ஜெயராம் (யாழ்ப்பாணம்), செல்வராஜா கோகுலன் (மயிலிட்டி தெற்கு), தாரகா அரியரட்ணம் (நல்லூர் கிழக்கு), சிறிஸ்கந்தராஜா சாரங்கன் (இடைக்காடு), அருட்பிரகாசம் உமையாள் (சித்தன்கேணி), சுகுமாரன் சுஜிந்தன் (உரும்பிராய் கிழக்கு),

கிருஸ்ணா பாரதிதாசன் (கந்தர்மடம்), சந்திரிகா கதிர்வேல் (தெல்லிப்பளை), உமா ராணி சிதம்பரநாதன் (கொக்குவில் மேற்கு), லீலா வினோதன் மனோராஜ் (மறவன்புலவு), மகேந்திரா துஸ்யந்தன் (மானிப்பாய்), சசிகலா பூரணலிங்கம் (கோப்பாய் தெற்கு), சுப்பிரமணியம் பார்த்திபன் (புலோலி தெற்கு), தெய்வேந்திரன் வாசுதீசன் (ஆவரங்கால்), சிவசுந்தரம் ராஜாராம் (துன்னாலை மேற்கு), ரஜீவ் குலசிங்கம் (கலட்டி),

வேலுப்பிள்ளை யோகநாதன் (மட்டுவில் தெற்கு), நித்தியநாதன் வித்தியா (கல்வயல்), சுந்தரலிங்கம் சுஜதீப் (அளவெட்டி), சிவராசா அருளானந்தன் (மானிப்பாய்), சிதம்பரநாதன் ஜெனார்த்தனன் (உடுவில் தெற்கு), புவனேஸ்வரன் ஜெயமதி (வண்ணார் பண்ணை), இராஜசெல்வம் லதர்சன் (மீசாலை தெற்கு), சோதிநாதன் சிவனேசன் (சித்தன்கேணி), நடராஜ் விசாகன் (இடைக்காடு), கசிந்தன் பிரசன்னா (சுன்னாகம்), கந்தையா சந்திரவதனா (காரைநகர்), பாலசிங்கம் சஞ்சீவன் (உடுவில்),

வாசுகி கந்தசாமி (யாழ்ப்பாணம்), குமாரசாமி பாலகிருஸ்ணா (சுழிபுரம்), சண்முகம் கமலநாதன் (இளவாலை), நிரஞ்சினி வன்னியசிங்கம் (வேலணை), கதிர்காமநாதன் பிருதிவிராஜா (சித்தன்கேணி), கலைவாணி துரைசிங்கம் (இரம்பைக்குளம்), சிவலிங்கம் புஸ்பகாந்தன் (சித்தன்கேணி), ரஜித்தா ஜெயபாலன் (முள்ளியவளை), உலகநாதன் தனசங்கர் (வவுனியா), இராமச்சந்திரன் சசிபரன் (திருவையாறு), சிவசுப்பிரமணியம் சஞ்சீவன் (இராமநாதபுரம்), செல்வராஜா சுகுணன் (நட்டாங்கண்டல்), வேகவனம் செந்தூரன் (குமுழமுனை), நாகேந்திரராஜா சுகிந்தினி (வரணி), சிவபுத்திரன் மீரா (நெல்லியடி), சோதிலிங்கம் சதீஸ்குமார் (தெல்லிப்பளை), துரைராஜசிங்கம் சனந்தனன் (அச்சுவேலி), சுதர்சினி சின்னத்துரை (நீர்வேலி மேற்கு),

## விஞ்ஞானம் (ஆங்கிலம்)

யசோதா யோகேஸ்வரன் (நல்லூர்), பேரம்பலம் குகவதனா (இளவாலை), உசாந்தினி சர்வானந்தன் (சுதுமலை தெற்கு), தாட்சாயினி ஜெயகுமாரன் (பருத்தித்துறை), நாகேந்திரராஜா நயந்தா (மீசாலை தெற்கு), கௌசல்யா சிறிகாந்தன் (கோண்டாவில்), கனகமனோகரி வைரவநாதன் (நீர்வேலி), அனுசியா அமிர்தலிங்கம் (நல்லூர்), சாந்தி மகாலிங்கம் (நீர்வேலி), தங்கராஜா தாட்சாயினி (நெழுக்குளம்), அனுஜா கிருஸ்ணதாசன் (கோண்டாவில்),

அமிர்தலிங்கம் கஜேந்திரன் (நீர்வேலி தெற்கு), ஜனார்த்தனி பாலச்சந்திரன் (கொக்குவில் கிழக்கு), ஜெயதர்சினி கனகசபாபதி (கைதடி தெற்கு), தனபாலசிங்கம் சிவாஜினி (குருமன்காடு), அபிராமி அருணகிரிநாதன் (மானிப்பாய்), இராமச்சந்திரன் கோகிலன் (சுன்னாகம்), ஹேமலோஜினி தேவராஜன் (உடுவில்), லீலவினோதன் ஜமுனா (மறவன்புலோ), ராஜேந்திரம் சசிக்குமார் (கோண்டாவில் மேற்கு), அருளப்பு ஜேனாட் நிரோசன் (நவாலி தெற்கு),

விமலாதாஸ் கதிர்ச்செல்வன் (கோமாங்குளம்), தர்சனா குலேந்திரன் (உயரப்புலம்), தர்மகுலசிங்கம் கவிதா (சாவகச்சேரி), பொன்னம்பலம் சிவமயூரன் (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), சிவுசுப்பிரமணியம் மணிமேகலை (கட்டுவன் மேற்கு), சிதம்பரநாதன் நீரஜா (ஏழாலை தெற்கு), செல்வராஜா செல்வதி (சுன்னாகம்), சுஜித்தா ராசையா (நீர்வேலி தெற்கு), சுசீலா கதிர்காத்தையன் (மீசாலை தெற்கு)

## நாடகமும் அரங்கியலும்

இராஜரத்தினம் திலீபன் (சுன்னாகம் மேற்கு), தங்கவேல் ஜெயகாந்தன் (திருநகர் தெற்கு), சின்னராசா கௌசலா (அல்வாய் தெற்கு) கதிரவேல் உசாந்தினி (நெடுந்தீவு 13 ஆம் வட்டாரம்), தம்பிராஜா ஜெயதீபா (நீர்வேலி தெற்கு), துரைசிங்கம் அயூரன் (சுன்னாகம்), முருகதாஸ் ஐங்கரன் (ஆவரங்கால்), கோவிந்தப்பிள்ளை ராஜவாணி (கந்தரோடை), ஸ்ரான்லி சுபேதர் பெர்னாண்டோ (யாழ்ப்பாணம்), தர்மலிங்கம் ரஜிதரன் (கரணவாய் தெற்கு), கந்தசாமி மோகனதீபன் (நவாலி தெற்கு), குயிலினி வைத்தியநாதன் (அளவெட்டி மத்தி), கவிதா செல்வேந்திரன் (இணுவில்), காசிநாதன் சிறிரங்கலிங்கம் (மட்டுவில் தெற்கு), செல்வநாயகம் மேரி வத்சலா (மல்லாகம்), தமிழினி இரத்தினம் (யோகபுரம்), சிறிகாந்தன் பாக்கீஸ்வரி (மல்லாகம்), சதீஸ்வரி கந்தசாமி (சுன்னாகம்),

பாலச்சந்திரன் பிரேம்குமார் (பருத்தித்துறை), சபாரத்தினம் ரோகினி (மல்லாகம் கிழக்கு), மாணிக்கவாசகர் சிறிஉசாந்தினி (தெல்லிப்பளை), பாலசுப்பிரமணியம் துஷிகுமார் (கட்டுவன் தெற்கு), பாலசுப்பிரமணியம் நிரஞ்சினி (மட்டுவில் தெற்கு), நவநீதராஜா நந்தினி (பொலிகண்டி), லட்சுமணன் ஜீவநந்தினி (நெடுந்தீவு மேற்கு), சிவராமி வெற்றிவேல் (ஏழாலை தெற்கு), சற்குணலிங்கம் குகதாஸ் (ஏழாலை தெற்கு), நாகேந்திரன் நிரோஜன் (கொல்லவிளாங்குளம்), திஸவீரசிங்கம் கேதீஸ்வரன் (பண்றிக்குளம் வவுனியா), இந்திரராஜா கதிர்காமினி (தம்பசிட்டி) பாக்கியராஜா பாமா (உடுவில்), கீதா கிருஷ்ணமூர்த்தி (அராலி மேற்கு), யூலியட் அனித்தா நீக்கிலஸ் (அச்சுவேலி), தேவபாலன் சிந்துஜா (திருநெல்வேலி), நாகமுத்து திலகேஸ்வரன் (மந்துவில் கிழக்கு), காசிப்பிள்ளை ரஜித்குமார் ( ஆழியவளை),

## இந்துசமயம்

கசிந்தினி சந்திரசேகரம் (கனகராயன்குளம்), இராஜேந்திரம் பிரதீபா (துன்னாலை தெற்கு), நந்தினி துரைராசா (யோகபுரம்), பத்மலாவன்ஜம் கந்தசாமி (சுழிபுரம்), பத்மரூபி வரதராஜா (சுழிபுரம்), தேவகுரு சிறிகமலன் ( முள்ளியவளை), சின்னத்துரை சிவகுமார் (கரணவாய் தெற்கு), ஜெயந்தினி சின்னத்தம்பி (இயக்கச்சி), இரட்ணசிங்கம் பிரதீபன் (கோப்பாய் தெற்கு), சோமு றொகான்ராஜ் (சண்டிலிப்பாய்), ஆறுமுகம் நிசாந் (எழுதுமட்டுவாள்), தம்பிஜயா தர்மசீலன் (வரணி), ஜெகநாதன் ஜெயநாதன் (வசாவிளான்), சுமங்கலி செல்வராஜா (தெல்லிப்பளை), நவரட்ணம் யாழினி (பண்டாரிக்குளம்), தவராஜா மகிழ்ராஜன் (கரவெட்டி கிழக்கு), ஜேசுதாசன் பவளமலர் (வெளிக்குளம்), தனலக்ஷ்மி பாலசுப்பிரமணியம் (பொலிகண்டி மேற்கு), கோமளா ஐயாத்துரை (கைதடி தெற்கு), சின்னராஜா ரவிதாசன் (புத்தூர்),

பாலச்சந்திரன் நிருஷா (தோணிக்கல்), சண்முகலிங்கம் நிசாந்தினி (நெடியகுளம்), கருணாமூர்த்தி சிவகுமாரன் (மல்லாவி), றொகிதா நகுலேஸ்வரன் (நாவற்குழி தெற்கு), லிங்கரத்தினம் கஜலஷ்மி (யாழ்ப்பாணம்), தர்சினி காராளசிங்கம் (வண்ணார்பண்ணை), நமசிவாயம் சுமன் (புதுக்குடியிருப்பு), மேனகா இராஜதுரை (திருநெல்வேலி கிழக்கு), ஆறுமுகம் சுபாசினி (தவசிகுளம்), சிவானந்தினி சிவராஜா (குப்பிளான் தெற்கு), வாமதேவன் கிருபாநந்தி (திருநெல்வேலி), பாலகிருஷ்ணன் செல்வகுமார் (விசுவமடு), சிவசக்தி சிவனேசன் குப்பிளான் தெற்கு), சுப்பிரமணியம் சித்திரா (முத்தையன்கட்டு), சுப்பிரமணியம் இமையவன் (சின்னப்புதுக்குளம்), சின்னத்தம்பி மயூரன் (கண்டாவளை),

கிருபமூர்த்தி வேதா (மல் லாவி), அருளாந்தம் சிவரோகினி (நெலுக்குளம்), வேலுப் பிள்ளை கபிலகாந்தன் (ஒட்டுசுட்டான்), தயாளினி செல்வராஜா (யாழ்ப்பாணம்), மகேந்திரன் சிவரூபி (வவுனியா), வாசுகி தங்கராஜா (காரைநகர்), இதியா தெய்வேந்திரம் (நீர்வேலி), கோபாலபிள்ளை சுதர்சினி (நெடுந்தீவு 1 ஆம் வட்டாரம்), தர்மலிங்கம் சிவாஜினி (மருதங்கேணி தெற்கு), சுப்பிரமணியம் கமலகரன் (குப்பிளான்), நடராஜா நிசாந்தினி (மட்டுவில் தெற்கு), அகிலா சரவணமுத்து (திருநெல்வேலி கிழக்கு), தணிகா இராசரத்தினம் (சுன்னாகம்), கந்தசாமி மாலினி (புன்னாலைக்கட்டுவன் தெற்கு), அருண் தேவராஜா சர்மிளா (தாளையடி), காந்தரூபன் பிரபாகரன் (வத்திராயன் தெற்கு), சின்னமணி உதயதாரணி (மருதநகர்), ஜெகதீஸ்வரி ஐயாத்துரை (பரந்தன்).

## நூலக விஞ்ஞானம்

துர்க்கதர்ஜினி கதிர்காமத்தம்பி (தெல்லிப்பளை), இராசையா தயாளினி (கரவெட்டி மத்தி.), கணேசமூர்த்தி கோபி கிருஸ்ணா (பருத்தித்துறை), மயூரகிரிநாதன் பாமினி (புலோலி தெற்கு), கந்தசாமி கஜேந்திரன் (சுன்னாகம்), திருநீலகண்டன் தயாளினி (அராலி தெற்கு), சோமபாலன் அஜிதன் (முள்ளியவளை), தர்மகுலசிங்கம் கலைப்பிரியா (புலோலி தெற்கு), பாலசுப்பிரமணியம் ஜெபதர்சிகா (சுண்டுக்குளி), யோகேஸ்வரன் யோகமதி (யாழ்ப்பாணம்), வில்வராஜா நிசாந்தி (பளை), சுபநிதி பாலசிங்கம் (கொக்குவில் கிழக்கு), கந்தசாமி மோகனா (சுன்னாகம்), சுஜித்தா சர்வானந்தன் (யாழ்ப்பணம்), மொன்போர்ட் வினோஜினி (ஏழாலை மேற்கு), கவியரசி ஜோதிராஜா (அளவெட்டி), கணேசபிள்ளை மணிமாலவன் (சாவகச்சேரி), திருமாகல் கவீந்திரதாஸ் (அச்சுவேலி), இராஜாராமன் சொபிக்கா (இயக்கச்சி), சிவராஜா குகதாஸா (ஒட்டுசுட்டான்) சிவலிங்கம் தேனுசா (தெல்லிப்பளை), கனகசபேசன் திவ்யா (ஏழாலை தெற்கு), மௌனகுரு மோகனா (வல்வெட்டித்துறை),

பாலசுப்பிரமணியம் கஜேந்திரன் (யாழ்ப்பாணம்), கதிர்காமநாதன் தனஞ்செயன் (மீசாலை மேற்கு), கலைவாணி கந்தையா (மட்டுவில் தெற்கு), சிவஞானவேல் மதுசூதனன் (ஊரணி), ஸ்ரீப்பிரியா சிறிக்குமார் (யாழ்ப்பாணம்), மரியதாஸ் மறோமகஸன் (யாழ்ப்பாணம்), பேரின்பம் லியோனிற் கிருபாகரன (சுதுமலை வடக்கு), பேரம்பலம் தனுசன் (உருத்திரபுரம்), நிரஞ்சனா பத்மநாதன் (யாழ்ப்பாணம்), மரியநாயகம் மேரிடயானா (நவாலி தெற்கு), தர்மராஜ் அரவிந்தநேசன் (யாழ்ப்பாணம்), தனுசியா தனரட்ணம் (சூசைப்பிள்ளையார் குளம்), செல்வராஜா இந்திராதேவி (கட்டுடை), துரைரட்ணம் ஜென்சி (புதுக்குடியிருப்பு), அருமைத்துரை அனுஷா (உடுத்துறை தெற்கு), சதாசிவம் மலர்விழி (தாவடி), குணரட்ணம் ரகுநாதன் (புலோலி), லோகநாதன் சபேஸ் (நீர்வேலி), சிவானந்தன் வின்சன் (சுண்டுக்குழி), பாக்கியநாதன் கிரிசங்கர் (கோப்பாய் தெற்கு), பாக்கியநாதன் கார்த்திகா (அளவெட்டி தெற்கு),

துரைராஜா சுரேந்திரன் (கொக்குவில் கிழக்கு), சபாரட்ணம் திருமகள் (வவுனிக்குளம்), வடிவேல் ஜானகரன் (நெழுக்குளம்), சண்முகவடிவேல் ராதிகா (வட்டுக்கோட்டை), ஜெனி வெரோனா தில்லைநாயகம் (யாழ்ப்பாணம்), கணேசபிள்ளை பகீரன் (சுண்டுக்குளி), சங்கரப்பிள்ளை சுதர்சினி (சாவகச்சேரி), பிரதீபா பொன்னுத்துரை (அளவெட்டி), ஜெயப்பிரியா சிறிகந்தராஜா (யாழ்ப்பாணம்), நாகேஸ்வரன் பிரியந்தன் (ஸ்கந்தபுரம்), நிசாந்தினி நாகராஜா (பருத்தித்துறை), ஜெபநேசன் றெக்ஸன் (குருநகர்), தவராஜா கௌசிகன் (தாளையடி), றொகிதா நகுலேஸ்வரன் (நாவற்குழி தெற்கு), தேவகுரு சிறிகமலன் (முள்ளியவளை), தர்சிகா தர்மகுலசிங்கம் (கொக்குவில் மேற்கு), படைவீரசிங்கம் ரஜீவ் (மட்டுவில்), சிவப்பிரியா சுந்தரலிங்கம் (இராமநாதபுரம்), பாலசிங்கம் பிரபாகரன் (கோவிற்புதுக்குளம்), செல்வராஜா நிமலன் (வவுனியா), இராமகிருஸ்ணன் கிருஸ்ணானந்தன் (யோகபுரம்).

*(முற்றும்)*

### படுகொலை வழக்கில் சிறையிலுள்ள

# ஜெயேந்திரர் பிணையில் செல்ல உயர் நீதிமன்றம் நேற்று அனுமதி!



(புதுடெல்கி)

காஞ்சிபுரம் கோவில் சங்கரராமன் படுகொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்ட ஜெயேந்திரருக்கு டெல்கி உயர் நீதிமன்றம் நேற்று நிபந்தனையுடன் கூடிய பிணையில் செல்ல அனுமதி வழங்கியது.

வேலூர் சிறையில் அடைக்கப்பட்ட ஜெயேந்திரர், தன்னை பிணையில் விடுதலை செய்யக் கோரி சென்னை மேல் நீதிமன்றில் இரண்டு தடவைகள் மனுத் தாக்ல் செய்திருந்தார். எனினும் அவரது மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.

இதையடுத்து அவர் பிணை கோரி டெல்கி உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தார். அந்த மனு மீதான விசாரணை - தலைமை நீதிபதி லகோதி, நீதிபதிகள் ஜி.பி.மாத்துார், பி.டி.நல்லேகர் ஆகியோர் முன்னிலையில் கடந்த 6 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

"ஜெயேந்திரருக்குப் பிணை வழங்கப்பட்டால், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யும் வரை அவர் சங்கரமடத்துக்கு செல்ல மாட்டார்" என்று சட்டத்தரணி நேரிமன் உறுதியளித்தார். இதை எதிர்த்து தமிழக அரசு சார்பில் சுமார் 100 பக்க பதில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

'சாட்சிகளை ஜெயேந்திரர் கலைத்து விடுவார். எனவே அவருக்கு பிணை வழங்கக்கூடாது' என்று தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதைக்கேட்ட நீதிபதிகள் "சங்கராமன் கொலையில் ஜெயேந்திரருக்குத் தொடர்பு இருப்பதற்கான நேரடி ஆதாரம் உள்ளதா?" என்று கேட்டனர்.

2 நாட்கள் வாதம் நடைபெற்றது. பின்னர் தீர்ப்பை நீதிபதிகள் தள்ளி வைத்தனர். நேற்று இந்த வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

நீதிபதிகள் அளித்த தீர்ப்பு விபரம் வருமாறு:-

சங்கராமன் கொலை வழக்கில் ஜெயேந்திரரை விடுதலை செய்ய அடிப்படைக் காரணங்கள் இருப்பதாக நாங்கள் கருதுகிறோம். இதற்கான ஆதாரங்களையும் சட்டத்தரணிகள் தாக்கல் செய்துள்ளனர்.

எனவே, ஜெயேந்திரரை பிணையில் செல்ல உயர்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது.

சங்கரராமன் கொலை வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும்வரை ஜெயேந்திரர் காஞ்சி சங்கரமடத்துக்கு செல்லக்கூடாது.

ஜெயேந்திரர் தனது பாஸ்போட்டை உடனடியாக இந்த வழக்கை விசாரிக்கும் தனிப்படைப் பொலிஸாரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பொலீஸார் நடத்தும் அனைத்து விசாரணைகளுக்கும் ஜெயேந்திரர் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

வழக்கு விசாரணைக்காக பொலிஸார் எப்போதெல்லாம் அழைக்கிறார்களோ அப்போது ஜெயேந்திரர் பொலிஸார் முன் ஆஜர் ஆகவேண்டும்.

இவ்வாறு நீதிபதிகள் தீர்ப்பு அளித்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தெற்கைப் போலவே நிவாரண உதவி வடக்கு –கிழக்குக்கும் வழங்கப்படும்!

## ஆளுநர் ரிரோன் பெர்னாண்டோ தெரிவிப்பு

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தெற்கில் வழங்கப்படுவது போலவே வடக்கு - கிழக்கிலும் நிவாரண உதவிகள் சமமாக வழங்கப்படும் என்றும் - இந்தப் பணிகள் வடக்கு - கிழக்கில் சிறப்பாக நடைபெறுவதற்கு ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதாகவும் வட - கிழக்கு மாகாண ஆளுநர் ரிரோன் பெர்னாண்டா தெரிவித்தார்.

நேற்று யாழ்.குடாநாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த ஆளுநர் யாழ். செயலகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில் -

எனது விஜயத்தின் நோக்கம், சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை அறிந்து அவர்களுககு உதவி செய்வதாகும்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதியால் நான் விசேடமாக நியமிக்கப்பட்டுள்ளேன்.

வெளிநாடுகளின் மூலம் கிடைக்கின்ற நிதியுதவிகள் வடக்கு - கிழக்கு, தெற்கு எங்கும் சமமாகப் பங்கிடப்படும் என்பதை உறுதியளிக்கிறேன்.



அரச அதிபர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் இணைந்தே நிவாரணப் பணிகளை இராணுவத்தினர் மேற்கொள்வர். ஐ.நா. பொதுச்செயலர் கொபி அனான் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வருகைதர இருந்தபோதும அதனை தானே மறித்ததாக ஜனாதிபதி தெரிவித்துள்ள கருத்துத் தொடர்பாக எனக்கு ஒன்றும் தெரியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# ராசிக் குழுவின் முகாமும் சுனாமியால் அழிந்தது!

## 30 உறுப்பினர்களும் பலி

சுனாமி கடற்கொந்தளிப்பால் மட்டக்களப்பில் ராசிக் குழுவினர் தங்கியிருந்த முகாம் ஒன்று முற்றாகக் கடலுடன் அடித்துச் செல்லப்பட்டுவிட்டதாகவும், இதில் அந்த அமைப்பைச் சேர்ந்த 30 பேர்வரை உயிரிழந்துவிட்டதாகவும் இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

மட்டக்களப்பிலுள்ள இராணுவ முகாம் ஒன்றினருகே காந்தி தலைமையிலான ராசிக் குழுவினர் முகாமிட்டிருந்தனர். இந்த முகாமில் 30 உறுப்பினர்கள்வரை தங்கியிருந்தனர்.

சுனாமி கடற்கொந்தளிப்பின் போது இந்த முகாம் முற்றாகக் கடலுடன் அடித்துச் செல்லப்பட்டு விட்டதாகவும், காந்தி உட்பட 30 ராசிக் குழு உறுப்பினர்களும் இந்த அனர்த்தத்தில் உயிரிழந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1999 ஆம் ஆண்டு ராசிக் குழுவின் தலைவராக இருந்த ராசிக்- கரும்புலித் தாக்குதலில் கொல்லப்பட்ட பின்னர், காந்தி என்பவரே தலைவராக இருந்து - இராணுவத்தினருடன் சேர்ந்து இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

## கொபி ...

சாங்கம் இணக்கம் தெரிவித்திருந்த போதிலும் நேரப்பற்றாக்குறை காரணமாகவே அந்த விஜயம் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளுக்கு விஜயம் செய்வது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையினால் எந்தவித கோரிக்கையும் `விடுக்கப்படவில்லை என்றும் வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது இதேவேளை சி.என்.என். தொலைக்காட்சிக்கு ஜனாதிபதி சந்திரிகா அளித்த பேட்டியில் கொபி அனான் வடக்கே செல்ல வேண்டாமென தானே தடுத்ததாகக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டிஷ் ...

வுப் பொருட்களும் மருந்துப பொருடகளும் எடுத்துவரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கப்பலிலிருந்து இறக்கப்படும் பொருட்கள் அனைத்தும் உடனடியாகவே லொறிகள் மூலம் மட்டக்களப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை கடற்படையினரும், துறைமுக அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களும் இந்த பொருட்கள் இறக்கும் பணியில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.(04,10)

## 100 படையினர் ...

போதும் தற்போது அது இந்தோனேசியாவில் தரித்திருக்கிறது.

சிறியதொரு அமெரிக்கப் படை மீட்புப்பணியில் ஈடுபட்டிருக்கும் அதேவேளை 300 படையினர் காலியில் தளம் அமைக்கவுள்ளனர். அமெரிக்கப் படைகள் அழிந்துபோன 30 பாலங்களை அகற்றி மீளப் புனரமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனரெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈரோஸ் ...

பெரும்பாலானோர் புலிகளுடன் இணைந்த பின்னர் சிறுகுழுவினருடன் இவர் தனித்துச் செயற்பட்டார்.

கொழும்பில் இருந்து இராணுவப் பின்னணியுடன் இயங்கிவந்த இவர் - ஈ.பி.டி.பி., புளொட், வரதர் அணி ஆகியவற்றுடன் நெருக்கமான உறவுகளைப் பேணிவந்தவராவார். சில வருடங்களுக்கு முன்னர் பல இலட்சம் ரூபா வெளிநாட்டுக் கரன்சிகளுடன் சென்னை விமான நிலையத்தில் பிடிபட்ட இவர், அங்கு சிறைவைக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கொபி அனான்...

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சாசனத்தின் படி மக்கள் என்ற பதமே பயன்படுத்தப் பட்டிருக்கிறது. மக்கள் என்ற வார்த்தைக்குள் அனைத்து இன, மத மொழிப்பிரிவுகளும் உள்ளடக்கப் பட்டிருக்கிறது. ஐ.நா.செயலர் கொபி அனான் இலங்கை பயணத்தின் போது அரசின் அரசியல் தேவைகளை பூர்த்திசெய்வதற்காக பாரிய பாதிப்புக்குள்ளான வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்குச் செல்லாதது, வடகிழக்கை வேறொரு நாடாக அங்கீகரிப்பதாக ஆகிவிடும்.

ஐ.நா செயலர் போன்ற உயர் பதவியில் உள்ள ஒருவர் பொறுப் புணர்ச்சியுடன் அறிந்து செயற்பட வேண்டும். எமது அமைப்பு ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வின்போது இந்த விடையத்தை எழுப்ப இருக்கின்றது. இந்த விடையத்தை ஐக்கிய நாடுகள் சபையில் எழுப்புவதுடன், எமது முழு அழுத்தத்தையும் கொடுத்து, இலங்கை அரசாங்கத்தின் குறுகிய அரசியல் நோக்கம் காரணமாக செயலாளர் நாயகம் செல்லாத பெரும் பாதிப்புக்குள்ளான இடங்களுக்கு மீண்டும் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தப்போகின்றோம்.

செயலாளர் நாயகம் செல்லாத இடங்களில் இருப்பவர்களும் இலங்கையின் பிரஜைகள் என்று உணர வேண்டும் என்று இந்த அமைப்பின் தலைவர் நிமல்க பெர்னாண்டோ தெரிவித்தார்.

# தீர்க்கக்கூடிய வாய்ப்பை...

ஒட்டி, செயலணிக்குழுக்களும் அமைத்து இயங்கிவருகின்றன. இந்தச் செயலணியில் மாவட்ட பிரதேச செயலகப் பொறுப்பாளர்களும், வெளிநாட்டு, உள்நாட்டு அரச சாராப் பிரதிநிதிகளும் செயலாற்றி வருகின்றனர்.

அரசின் நடவடிக்கைகளும், உதவிப் பணிகளும் நான்கு அல்லது ஐந்து தினங்களுக்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட்டதாயினும், இன்றுவரை முழுமையாக, உருப்படியான செயற்பாடுகளாக அமையவில்லை.

மூன்று ஆண்டுகளாக யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருக்கின்றது. இந்தக் காலத்தில் வெளிநாடுகள் குறிப்பாக வடக்கு - கிழககின் புனர்வாழ்வு நடவடிக்கைக்கென வழங்கப்படவுள்ள நிதியைப் பயன்படுத்த, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை நிறுவவேண்டிய சந்தர்ப்பத்தையும், அதன்மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் சந்தர்ப்பத்தையும் ஜனாதிபதி முறியடித்துவிட்டார்.

மீண்டும் யுத்தம் வெடிக்கப் போகின்றது என்னும் சூழலில் சர்வதேச நாடுகள் சமாதான முயற்சிகளை முன்னெடுத்த வேளையில் தான், சுனாமி கடற் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் மனிதாபிமான நடவடிக்கைகள் முதன்மைபெற வேண்டியது அவசியமாகும்.

இரண்டாவது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இன நல்லுறவை ஏற்படுத்தவும், அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்னும் அரசியல் இலக்கையும் அடிப்படையாகக் கொண்டு நிவாரண நடவடிக்கைகளும், கட்டுமானப் பணிகளும் வடிவமைக்கப்படவேண்டும். சர்வதேச சமூகமும் இந்தக் கருத்தையே கொண்டிருக்கிறது.

ஆனால், ஜனாதிபதியின் அரசாங்கமும், இன முரண்பாட்டை விரிவுபடுத்துவதிலும் ஜனாதிபதி செயலகத்திலும் மத்தியிலும் அதிகாரத்தைக் குவிப்பதிலும் அதற்கும் மேலாக இராணுவ மயப்படுத்தும் நடவடிக்கைகளிலும் தொடர்ச்சியாகத் திட்டமிட்டுச் செயலாற்றுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். தீவிரமாக எதிர்க்கின்றோம். ஏற்கனவே வடக்கு - கிழக்கில் ஒரு இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை இருந்திருந்தால், சுனாமி பேரழிவின் பின் நிவாரணப் பணிகளையும் மீள் கட்டுமானப் பணிகளையும் முன்னெடுப்பது இலகுபட்டிருக்க முடியும். அதனையும் முறியடித்துவிட்டு நிவாரணத்திற்காக அரசு மற்றும் புலம்பெயர்ந்த தமிழ் மக்கள், அரச சாராத நிறுவனங்கள் அனுப்பவுள்ள உதவிகளையும் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளிலும் ஜனாதிபதி ஈடுபடுகின்றார்.

இந்துமா சமுத்திரப் பிராந்தியத்தில் பல கொள்கை முரண்பாடுகளையும், பல பிராந்திய ஆதிக்க நலன்களையும் கொண்டுளேள படையணிகளை, சுனாமிப் பேரழிவைப் பயன்படுத்தி இலங்கையில் நிலை கொள்ள வைத்திருப்பதானது, குறிப பாக தமிழ்த்தேச மக்களை அச்சுறுத்தி நிற்கின்றது.

இன முரண்பாடுகளும், பேரினவாத-சிந்தனையும் கொண்டு நூறு வீத சிங்கள இராணுவத்தை, தமிழ் தேச மக்களின் நிர்வாகத்திலும், பராமரிப்பிலும் உள்ள முகாம்களை பொறுப்பேற்று நடத்த ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த நடவடிக்கையானது வடக்கு - கிழக்கு இராணுவ நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் ஜனாதிபதி அதிகாரத்தை நிலை நாட்டும் செயலாகும்.

இந்த நடவடிக்கைகளுக்குப் பின்னரும் தமிழ்த் தேசத்தில் சுனாமி பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்கால நலன்களை மையமாகக் கொண்டு சர்வதேச நிவாரண உதவிகளைப் பயன் படுத்தும் கட்டமைப்புக்களையே தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் நாமும் ஏற்படுத்தி வந்திருக்கிறோம்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவும், அவர் அரசும் தீவிர இராஜதந்திர நடவடிக்கைகளைப் பயன்படுத்தி ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான், சுனாமி பேரழிவால் மோசமாகப் பாதிக்கப் பட்ட குறிப்பாக அம்பாறை, முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களுக்குப் பயணம் செய்வதைத் தடுத்து நிறுத்திவிட்டனர். பகிரங்கமாக அனைவரும் தெரிந்து கொண்ட ஒரு மனிதாபிமானமற்ற, நாகரிகமற்ற ஒரு செயலை, ஜனாதிபதியும் அவர் அரசும் நிறைவேற்றி விட்டன.

சமாதான வழிகளில் பேச்சுவார்த்தை மூலம் மனிதாபிமானப் பணிகளின் ஊடாக, இனப்பிரச்சினைக் குத் தீர்வுகாணமுடியும் என்ற பொது நம்பிக்கையை ஜனாதிபதி தகர்த்து விட்டார்.

இந்தப் பின்னணியில்தான் ஜனாதிபதியின் பிரதிநிதி, வடக்கு - கிழக்குக்கான ஆளுநர் யாழ்.வருகிறார். இந்தச் சூழலில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினாகள், ஆளுநரின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளாமல் விடுவது என்று தீர்மானித்தோம்.

தமிழ்த்தேச மக்களின் மனக் குமுறல்களையும், உணர்வுகளையும் இதன்மூலம் ஜனாதிபதியும் சர்வதேசமும் அறிந்துகொள்ள வேணடும் என வேண்டுகோள் விடுகின்றோம்.

என்று அந்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது.

## நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அமெரிக்க டொலர் | 97.59 | 99.54 |
| ஸ்ரேலிங் பவுண் | 182.29 | 186.85 |
| யூரோ | 127.12 | 130.65 |
| சுவிஸ் பிராங் | 81.83 | 84.66 |
| யென் | 0.9281 | 0.9560 |

## யாழ்ப்பாண...

யோர் வரவேற்றனர். தொடர்ந்து செயலகத்தில் யாழ்.மாநகரசபை ஆணையாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி, பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலரைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு சுமார் இரண்டு மணிநேரம் நடைபெற்றது. தொடர்ந்து யாழ்.பொது நூல்நிலையத்துக்குச் சென்று பார்வையிட்ட ஆளுநர், பின்னர் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு, அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் தேவைகள் தொடர்பாகக் கேட்டறிந்தார். (12)


# மரண அறிவித்தல்

## திருமதி நாகம்மா சிவகுரு

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா சிவகுரு 08.01.2005 (சனிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் அமரர் செல்லப்பா சிவகுருவின் அன்பு மனைவியும், தங்கம்மாவின் பாசமிகு சகோதரியும், அமரர் திருநாவுக்கரசு மல்லிகாதேவி, யோகேஸ்வரன், சந்திரபாலன் (சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம்), சிவயோகபாலன் (சுவிஸ்), செல்வபாலன் (சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேஸ்வரி, தங்கராசா, அமிர்தபாசினி, இராஜேஸ்வரி, சிவலோஜினி (சுவிஸ்), மனோகரி (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமியும், மதிபரன் (மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி), கலைமதி, கலாகரன், கைலைநாதன், ஜெயரூபன், ஜெயஸ்ரீ, கேமலதா (ஆசிரியை, வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை), கேமரதி, கேசவன் (G.A.Q 2004), கேமரஞ்சி, கேதீபன், கேதினி, நிசாந்தன் (மலேசியா), நிறோன், டர்சன், மதுசன், தாருஜா (சுவிஸ்), காயத்திரி (சுவிஸ்), தர்சனா (சுவிஸ்), ஈழதர்சன் (சுவிஸ்), யாழிசன் (சுவிஸ்), ராஜி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், சிம்ஜோன், ஜெப்தா, சிபியோன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11.01.2005 செவ்வாய்க் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 1 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இவ அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாவகச்சேரி வடக்கு.
மருதடி றோட்.
சாவகச்சேரி.
(சி-3708)

தகவல்:-
பிள்ளைகள்.


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.01.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.